# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு சித்திரை மாதம் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 15-ம் இலக்கம்


# இதோ, சிலுவைமரம்! ஆராதிப்போம் வாரீர்!!



**இதோ, தபசுகாலத்தின் இறுதிவாரம் — மிகவும் முக்கியமான வாரம் — பசிசுத்த வாரம் — யேசுநாதருடைய திருப்பாடுகளையும், சிலுவை மரணத்தையும்பற்றி அதிகமதிகம் நினைவுகூர்ந்து தியானிக்கவேண்டியவாரம்.**

தபசுகாலம் முழுவதிலும் நமது இரட்சகருடைய திருப்பாடுகளைத் திருச்சபை எமக்கு ஞாபகப்படுத்துகிறது எனினும், பரிசுத்த வாரத்தில் தன் சிந்தனை முழுவதையும் கிறிஸ்துநாதருடைய பாடுகளிலும் மரணத்திலுமே செலுத்துகின்றது. இவ்வாரத்தில், நான்கு சுவிசேஷங்களிலுமிருந்து யேசுநாதருடைய திருப்பாடுகளின் வரலாறு பூசைவேளையில் முறையாக வாசிக்கப்படுகிறது. யேசுநாதருடைய சிலுவை மரணத்தோடு சம்பந்தப்பட்ட வேத வாக்கியங்கள் அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றன. சிலுவைமரத்தின் மகிமையைப் புகழ்ந்துபோற்றும் கீதங்கள் பாடப்படுகின்றன.

1. நாவே பாடிடாய் செயங்கொள்
நாதரின் புகழ்ச்சியை
பூவில் மாந்தர் தம்மை மீட்கப்
பொற்புறும் சிலுவையில்
பொன்றி மரணத்தை அவர்
வென்ற செய்தி கூறியே.

2. ஆதமேவை ஓர் மரத்தால்
அன்றுசெய்த தீங்கினை
மேதினியில் நீக்குதற்கு
வேறொரு மரத்தையே
காதலாய்த் தெரிந்தெடுத்தார்
கருணைசேர் கர்த்தரே.

3. தேவபலியைச் சுமக்க
நீயே பேறுபெற்றனை,
சீவ துறையாகினுய் நீ
சேதமுற்ற லோகர்க்கு;
சிந்து புருவை இரத்தம்
முந்த நீ குளித்தனை.

யேசுக்கிறிஸ்துநாதர் "தம்மைத் தாமே தாழ்த்தி, மரணமட்டுக்கும், அதாவது சிலுவை மரண மட்டுக்கும் கீழ்ப்படிதலுள்ளவரானுர்" (பிலி. 2:8). உலகத்தின் பாவங்களைப் போக்குவதற்கு மனித அவதாரமெடுத்த தேவசுதன் பாடுகளையும், அகோர சிலுவை மரணத்தையும் அனுபவிக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை. ஆனல், சருவேசுரனுடைய அளவில்லாத அன்பையும், அவர் பாவத்தை எவ்வளவாக அருவருத்துத் தண்டிக்கிறுர் என்பதையும் பிரசித்தமாய்க் காட்டும்படியே அவைகளை அனுபவித்தார். "சருவேசுரன் நம்மை முந்திச் சிநேகித்து நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரப் பலியாகத் தமது குமாரனை அனுப்பினதினுலே அவருடைய அன்பு இன்னதென்று விளங்குகின்றது" (1 அரு. 4:10). "தமது சொந்தக் குமாரன்மேல் முதலாய் இரக்கமில்லாமல், நம்மெல்லோருக்காகவும் அவரை (மரணத்திற்கு) ஒப்புக்கொடுத்தார்" (உரோ. 8:32) ஆகையால், சருவேசுரனுடைய அளவில்லாத அன்புக்கு எதிராக நாம் கட்டிக்கொண்ட அக்கிரமங்களை இப்பரிசுத்த நாட்களில் நினைவுகூர்ந்து, கண்ணீர் சிந்தித் துக்கப்பட்டு அவருடைய இரக்கத்தை நல்ல பாவசங்கீர்த்தனமூலம் அடைந்துகோள்ளுதல்பொருத்தமன்றோ! இதையே நமது இரட்சகரும் விரும்புகிறுர். "யாதொருவன் பாவஞ்செய்திருந்தால் நீதிபரனுகிய யேசுக்கிறிஸ்துநாதர் பிதாவினிடத்தில் நமக்கு மனுப்பேசுகிறவராயிருக்கிறுர். நம்முடைய பாவங்களுக்கு அவரே பிராயச்சித்தப் பலியாயிருக்கிறுர். நம்முடைய பாவங்களுக்காக மாத்திரமல்ல, சர்வலோக பாவங்களுக்காகவும் அவர் பிராயச் சித்தப் பலியாமே" (1 அரு. 2:1–2). ஆகையால், யேசுநாருடைய சிலுவை மரணத்தின் பேறுபலனை இன்னும்

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

## பாப்பரசரும் பரிசுத்தவாரச் சடங்குகளும்

**குருத்தோலை ஞாயிறு:** பரிசுத்த பாப்பரசர் அர்ச். இராயப்பரின் மகாலயத்தில் குருத்துக்களை ஆசீர்வதித்து திவ்வியபூசைப்பலியும் நிறைவேற்றுவார்

**பெரியவியாழன்:** பரிசுத்த தந்தை அர்ச். அருளப்பரின் லத்தரன் மகாலயத்தில் பன்னிரு கருதினுல் தியாக்கோன்மார்களுக்கு மேற்றிராணிப்பட்டம் அருளுவார்.

**பெரியவெள்ளி:** பரிசுத்த பாப்பரசர் றோமபுரிக்கு வெளியிலுள்ள அர்ச். சின்னப்பரின் மகாலயத்திற்குச்சென்று, அங்கு நடைபெறும் திருச்சடங்குகளில் பங்குபற்றுவார்.

**பாஸ்காஞாயிறு:** காலையில் பரிசுத்ததந்தை அர்ச். இராயப்பரின் மகாலயத்தில் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றுவார். நண்பகலில், அதாவது 12-30 மணிக்கு பரிசுத்த பாப்பரசர் அர்ச். இராயப்பர் மகாலயத்தின் முகப்பிலுள்ள நடுப்பலகணியில் தோன்றி "நகருக்கும் உலகுக்கும்" தமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை அளிப்பார்.

## கருதினுல்மார் அனைவரும் மேற்றிராணிமாராவர்

முதன்முறையாகத் திருச்சபையின் கருதினுல்மார்கள் யாவரும் மேற்றிராணித்துவ அபிஷேகம்பெற்றிருப்பர்என பரிசுத்த பாப்பரசர் சென்றமாதம் 19-ம் தேதி நடாத்திய கருதினுல்மார் சங்கத்தின் இரகசியகூட்டத்தில் தெரிவித்தார். தற்போது மேற்றிராணிப்பட்டம்பெருமல் சாதாரணகுருக்களாகவிருக்கும் 12 கருதினுல்மாரை அடுத்துவரும் பெரிய வியாழக்கிழமை தாமே மேற்றிராணிமாராக அபிஷேகம்செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார். இவ்வாறு அபிஷேகம்பெறவிருக்கும் கருதினுல்மார் பின்வருமாறு:

1. மேன்மைதங்கிய அல்பிறேடோ ஒட்டாவியானி
2. ,, ,, அல்பேட்ரோ தி யோறியோ
3. ,, ,, பிரன்சிஸ்கோ பிராச்சி
4. ,, ,, பிரன்சிஸ்கோ றுபேட்டீ
5. ,, ,, அந்தெரேயா யூலியன்
6. ,, ,, ஆர்காடியோ லாறுவோனு
7. ,, ,, பிரன்சிஸ்கோ மொறுனே
8. ,, ,, தியடோர் கேட்
9. ,, ,, அகுஸ்ரீன் பெயா
10. ,, ,, அந்தோனியோ பாச்சி
11. ,, ,, மிக்கேல் பிறவுண்
12. ,, ,, அசைல்ம் அல்பறேடா

இனிமேல் நியமிக்கப்படும் கருதினுல்மார் மேற்றிராணித்துவ அபிஷேகம் பெருதவர்களாயிருந்தால் உடனடியாக மேற்றிராணிமார்களாக அபிஷேகம்பண்ணப்படுவர். ஏனெனில், முழுத்திருச்சபையையும் ஆண்டுநடத்துவதில் பாப்பரசருக்கு ஆலோசனை கூறுகிறவர்களாய் இருக்கும் கருதினுல்மார், உலகத்திலுள்ள மேற்றிராணிமார்களைப்பார்க்க அதிகாரங்களில் உயர்ந்தவர்களாய் இருத்தல் பொருத்தமே.

## பரிசுத்த பாப்பரசரின் பாஸ்காச் செய்தி

இம்மாதம் 21-ம் திகதி, அதாவது பெரியசனிக்கிழமை மாலை 8 மணியளவில், பரிசுத்த பாப்பரசர் தமது பாஸ்காச் செய்தியையும் ஆசீர்வாதத்தையும் உலகிற்குஅளிப்பார். இச்செய்தி வத்திக்கான் வானொலி நிலையத்தால் ஒலிபரப்பப்படும். இவ்வொலிபரப்பை ஐரோப்பியநாடுகளிலுள்ள பிரதான வானொலி நிலையங்கள் அஞ்சலிசெய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்றிராசனங்கள் தரும் செய்தி

# கொழும்பு அதிமேற்றிராணி ஆண்டவர் அவர்களின்
# தபசுகால ஆயர் நிருபம்

[ தொடர்ச்சி ]

## 2. திருச்சபை பரிசுத்தமாய் இருக்கின்றது

திருச்சபையின் அமைப்பு பின்வருவது:

திருச்சபை {
- வெற்றிகாத் திருச்சபை — அல்லது அர்ச்சியசிஷ்டர்கள்.
- உத்தரிக்கும் திருச்சபை—அல்லது உத்தரிக்கிற ஆத்துமாக்கள்.
- போராடும் திருச்சபை — அல்லது இவ்வுலகில், இருளின் வல்லபங்களுடன் அதாவது சாத்தானுடன் ஓயாது போராடிக் கொண்டிருப்பவர்கள்.

வெற்றிகாத்திருச்சபையும், உத்தரிக்கும் திருச்சபையும் பரிசுத்தமாய் இருக்கின்றன என்பது துலாம்பரமாய் இருக்கின்றபடியால், அவற்றைப்பற்றி இங்கு குறிப்புக்கூற வேண்டிய அவசியமில்லை. ஆனால், நாம் இப்பொழுது கருத்தில் கொள்ள வேண்டியது போராடும் திருச்சபையைப்பற்றியே. அதாவது, எவ்விதம் போராடும் திருச்சபையில் இருந்துகொண்டு பரிசுத்ததனத்தை அடைய முடியும் என்பது தான் கேள்வி.

பரிசுத்ததனமாவது யாது? எங்கள் ஒழுக்க சீவியத்தில் கடவுளுடன் நெருங்கியவிதமாய் ஒன்றித்திருத்தலே பரிசுத்ததனமாகும். இவ்வுலகில் இந்த ஒன்றிப்பை அடைய இரண்டு வழிகள் உண்டு. ஒன்று சுய ஒறுத்தல் மூலம் படைக்கப்பட்ட வஸ்துகளில் நின்று பற்றற்று வாழ்தல்; மற்றது, அன்பினால் அதாவது சிநேகப் பெருக்கத்தினால் கடவுளுடன் பற்றுக்கொண்டு சீவித்தல். கடவுளுடைய கற்பனைகளை அனுசரித்தலே அன்பின் அறிகுறி. "நீங்கள் என்னைச் சிநேகித்தால் என் கற்பனைகளை அனுசரியுங்கள்" (அரு. 14: 15).

இங்கு கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதாவது, திருச்சபையின் அங்கத்தவர் ஒருவர் அனுசரித்துச் சீவிக்க அழைக்கப்பட்டிருக்கும் பரிசுத்ததனம் ஒரு சுபாவ முறையான பரிசுத்ததனமல்ல; ஆனால், சுபாவத்துக்கு மேலானதொன்றாகும். அது கடவுளுடைய பிள்ளைகளுக்குரிய பரிசுத்ததனம்; ஆகையால் பரமண்டலங்களிலேயிருக்கிற உங்கள்பிதா, உத்தமராய் இருப்பதுபோல நீங்களும் உத்தமமாய் இருங்கள் (மத். 5: 48).

ஆனால், இந்தசுபாவத்திற்கு மேலான பரிசுத்ததனம், அல்லது சாங்கோபாங்க சீவியம் சுபாவத்துக்கடுத்த உத்தமதனத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. ஒருவன் நல்ல கிறிஸ்தவனாய் இருக்க வேண்டுமாகில், அவன் முதன் முதல் நல்ல மனிதனாய் இருக்க வேண்டும். எனவே, அவன் தன் நடத்தையில் 'விவேக' முள்ளவனாய் இருக்க வேண்டும்; மற்றவர்கள் மட்டில் 'நீதிநியாய' முள்ளவனாய் இருக்க வேண்டும். கஷ்டமான, சங்கடமான காலங்களிலோ, திடாரிக்க மனோர்மமுள்ளவனாய் இருக்க வேண்டும். இவ்வுலக இன்பங்களை, சுகங்களை அனுபவிப்பதில் மட்டுத்திட்டம் உள்ளவனாய் இருக்க வேண்டும்.

இன்னும் இந்த சுபாவத்துக்கு மேலான கட்டுக்கோப்பாகிய பரிசுத்ததனத்தை இயற்கை அல்லது சுபாவ அடிப்படையிலேயே கட்டி எழுப்ப வேண்டும். இந்தமுக்கிய வேலையைச் செய்ய வேறு சுபாவமுறைகள் அல்லது முற்றும் மனிதமுறைகள் மாத்திரம் போதா. தெய்வீக வழிவகைகள் வேண்டவேவேண்டும். இவ்விதமான தெய்வீக வழிவகைகள் திருச்சபையில் வழங்கும் தேவதிரவிய அநுமானங்களாம். இத்தேவதிரவிய அநுமானங்கள் தெய்வீகசீவியத்தை எங்கள் ஆத்துமங்களில் பாய்ச்சி, எங்களுக்கும் கடவுளுக்குமிடையில், சுபாவத்துக்கு மேலான ஐக்கியத்தையும், பந்திப்பையும் கொடுக்கின்றன. ஏனெனில், தேவதிரவிய அநுமானங்களே எங்கள் ஆத்துமத்தில் தெய்வீகசீவியத்தைக் கொடுக்கவும், அதைப் பெருக்கவும், வலுப்படுத்தவும்வேண்டிய வழிவகைகளாய் இருக்கின்றன.

இதன் விளக்கம் பின்வருவது:

**ஞானஸ்நானம்:**

தெய்வீக பிறப்பின்மூலம் ஆத்துமத்துக்கு தெய்வீக உயிரைக் கொடுக்கின்றது.

**உறுதிப்பூசுதல்:**

இந்த தெய்வீகசீவியத்துக்கு பக்குவப்படுத்தலை அல்லது முதிர்ச்சியைக் கொடுக்கின்றது.

**தேவநற்கருணை:**

இந்த தெய்வீக சீவியத்தைப் போஷித்து வளர்க்கின்றது.

**பச்சாத்தாபம்:**

இத்தெய்வீக சீவியத்தை அடைவதற்கான தடைகளாகிய பாவப் போக்குகளையும், நாட்டங்களையும் தறித்து, குணப்படுத்தி, அப்பாவப் போக்குகள் முளைத்து எழும்பாவண்ணம் பலப்படுத்துகின்றது.

**மெய்விவாகமும், குருத்துவமும்:**

சமூக தேவதிரவிய அநுமானங்கள் என்று அழைக்கப்படுகின்றன, எவ்வாறெனில், மெய்விவாகம், குடும்பசீவியத்தில் கடவுளின் பிள்ளைகள்போல் சீவிக்கவும், பரலோக இராட்சியத்திற்கான புதிய பிரசைகளை உருவாக்க, புத்தம் புதிய ஒருஉயிரையும் உண்டாக்குவதில் கடவுளுடன் ஒத்துழைக்கவும், பெற்றோருக்குப் போதிய வரப்பிரசாதங்களைக் கொடுக்கின்றது. குருத்துவமோ, திருச்சபையென்னும் கடவுளின் பிள்ளைகளாலான சமுதாயத்தைப் போஷித்துவளர்க்கவும், அதை ஆட்சிசெய்யவும் குருப்பிரசாதிக்கு கிறிஸ்துவின் ஞானச்சரீரத்தின் சிரசுக்குரிய (தலைவருக்குரிய) மகத்துவத்தையும், சுதந்தரங்களையும் கொடுக்கின்றது.

**அவஸ்தைப்பூசுதல்:**

நரக அந்தகார வல்லபங்களுடன் நாம்ஆடும் கடைசிப்போரில் தோல்வி அடையாதபடி எங்களில்உள்ள தெய்வீக சீவியத்தைப் பலப்படுத்துதற்கான வழியாய் இருக்கின்றது. தேவதிரவிய அநுமானங்கள் எல்லாம் தெய்வீக சீவியத்தின் பிரதான ஊற்றுக்களாய் இருப்பதினால், இவை ஆத்துமத்தில் தெய்வீக தத்துவங்களைப் பாய்ச்சிப் பலப்படுத்தி, வலுப்படுத்தவும் வேண்டிய விசேட வழிவகைகளாய் இருக்கின்றன. உதாரணமாக, அளிக்கப்படும் ஒழுக்க சம்பந்தமான புண்ணியங்களும், தேவசம்பந்தமான புண்ணியங்களாகிய விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்பனவுமாம்.

பரிசுத்த திருச்சபை இத்தேவதிரவிய அநுமானங்களை அதன் எல்லா அங்கத்தவர்களாகிய விசுவாசிகளுக்கும் அளிக்கின்றது. ஏனெனில், விசுவாசிகள் சுபாவத்துக்குமேலான பரிசுத்ததனத்தை [illegible] சுவாமியால் [illegible] வீக வழிவகைகள் இவைகளே. தேவதிரவிய அநுமானங்களை முறையாய்ப் பெறாமல், சுபாவத்துக்கு மேலான முறையில் அமைக்கப்பட்ட பரிசுத்ததனத்தை அடைவது அசாத்தியமாகும். ஆகவேதான், திருச்சபையின் அங்கத்தவர்கள் பரிசுத்ததனத்தில் வளர்வதற்கு, தேவதிரவிய அநுமானங்களைத் தகுதியானமுறையில் பெறுதல் அத்தியாவசியம். சில தேவதிரவிய அநுமானங்களை ஒருமுறை மாத்திரம் பெற்றுக்கொள்ளக்கூடும்என்பது தெளிவு. ஞானஸ்நானம் ஒரு பிறப்பு. ஆகையால், ஒருமுறை மாத்திரம் அதைப் பெறமுடியும். உறுதிப்பூசுதல் பெறுவதன்மூலம், ஒருவர் அந்தப் புதுப்பிறப்பில் முதிர்ச்சி அல்லது பக்குவம் அடைவதினால், அதையும் ஒரே ஒருமுறை மாத்திரம் பெறமுடியும். போஷணையுள்ள உணவும், நோய்க்கு மருந்தும் அடிக்கடிதேவைப்படுகின்றனவாகையால், போஷித்து வளர்க்கும் தேவநற்கருணையை அடிக்கடியும், நோயைத்தீர்க்கும் மருந்தாகிய பச்சாத்தாபத்தைத் திரும்பத் திரும்பவும் பெறவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

தேவதிரவிய அநுமானங்களைத் தகுதியாய்ப் பெறுவதனால் எங்கள் தெய்

[8-ம் பக்கம் பார்க்க]

---

தாண்டவன்வெளிச் செய்தி

### மாசில்லாமாதா பத்திச்சபையின்
## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி பங்கில் உள்ள பத்திச்சபைகளில் ஒன்றாகிய இளம் வாலிபப்பெண்களின் மாசில்லா மாதா பத்திச்சபையானது இப்பங்கில் நீண்டகாலமாக நடாத்தப்பட்டுவருகின்றது. இச்சபை பிரதி சனிக்கிழமை தோறும் பத்திச்சபையினர் பூசையின்பின் பங்குக்குருவானவர் வண. ஜோர்ஜ் ஈ.எல். வம்பேக் சுவாமி அவர்களின் சமுகத்தில் கூடும். இச்சபையினர் முக்கியமாக கிழமை தோறும் சனி வாரப் பூசையில் பங்குபற்றி, திவ்விய பலிப்பாடல்களையும், தேவதாயின் மகிமைப் பாடல்களையும் பாடி, திவ்விய பூசைகண்டு திவ்விய நற்கருணை உட்கொள்வார்கள்.

இச்சபையினர், பங்கினதும் சபையினதும் முன்னேற்றத்துக்காக பின்வரும் சேவைகளைச் செய்து வருகின்றார்கள்.

இப்பங்கில் உள்ள மற்றப் பத்திச்சபையினரையும் சேர்த்து மாதத்தின் 3-வது சனிக்கிழமை மாலை மாதாந்தத் தியானம்நடாத்துதல். மாதத்தின்முதல் சனிக்கிழமைகளில் மற்றப் பத்திச்சபையினருடன் தாங்களும் சேர்ந்து மாதாந்தப் பொதுக்கூட்டம் நடாத்துதல். மட்டக்களப்பு மாதாசபை பிராந்தியக் கூட்டங்களுக்குச் சமுகம் கொடுத்தல். கிழமைதோறும் சனிவாரம் பூசையில் பாடுதல். வயோதிபர்மடம், வைத்தியசாலை தரிசித்தல். கோயிலில் உள்ள பூசை உடைகளை திருத்துதல். பூச்செண்டு, மெழுகுவர்த்திக்கால் முதலியவற்றை மினுக்கித் துப்புரவுசெய்தல் என்பனவாம்.

இச்சபையினர் அவர்கள் திருநாளையும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தையும் அண்மையில் கொண்டாடினர். பொதுக்கூட்டத்தில் கட்டளைக்குரவர் "நீங்கள்செய்யும் சேவைகள் சிறிதளவானாலும் மிகவும் வரவேற்கத்தக்கவை எனப் பாராட்டினார். வருடாந்த அறிக்கைகள் காரியதரிசி, தனாதிகாரி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. செல்வி அன்னம்மா ஞானப்பிரகாசம் தலைவியாகவும், செல்வி ஆஞ்சலீனா செல்வருணி லுயிஸ் உபதலைவியாகவும், செல்வி வசந்தா அந்தோனிப்பிள்ளை காரியதரிசியாகவும் செல்வி வசந்தா தம்பிமுத்து தனாதிகாரராகவும், செல்விகள்:- றஞ்சினி தம்பிநாத்து, கலிஷ்ரா தியோப்பிலஸ், சபை ஆலோசகர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இச்சபையில் தற்போது 38 அங்கத்தினர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச்சபை மேலும் வளர தேவதாய் என்றென்றும் ஆசீர்வதிப்பாளாக.

—நிருபர்.

---

### நுவரேலியாவில்
## இளைஞர் கத்தோலிக்க சங்க அங்குரார்ப்பணம்

நுவரெலியா விசாரணைப்பங்கில் இம்மதி முதலாந்தேதி ஞாயிற்றுக்கிழமையன்று இப்பகுதி மாணவ மாணவிகளுக்குஎன ஓர் கத்தோலிக்க இளைஞர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. "கண்டி மேற்றிராசனத்துக்கு இளைஞர்சங்கம ஒருபுதுமுயற்சியல்ல. இம்மேற்றிராசனத்தின் பலவிசாரணைப்பங்குகளிலும் இச்சங்கம் பலகாலமாக இயங்கித் தொண்டாற்றிவருகின்றது" இவ்வாறு இச்சங்கத்தை ஆரம்பித்துவைத்த வண. கத்பேட் பெரேரா, ஓ. எஸ். பி. சுவாமியவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார். "திருச்சபைத்தாய் தனது ஞானமக்களை ஒன்றுபடுத்தவும், ஐக்கியமாய்த் தொண்டுசெய்ய ஊக்குவிக்கவும், நல்வழியில் வழிப்படுத்தவும் தான் சபைகளையும், சங்கங்களையும் ஏற்படுத்தித் தந்துளது. இளைஞாகியநீங்கள் ஒன்றுபட்டுக் கிறிஸ்துவின் இராச்சியத்துக்குச் சேவைசெய்யவும், கிறிஸ்துவ ஐக்கியத்தை வளர்க்கவும், ஞானச் சீவியத்தில் விருத்தியடையவுமே இச்சங்கத்தை இங்கு தொடங்குகிறோம்" என்றார் அவர். அவர் மேலும்பேசுகையில், "கிறிஸ்துவ அன்புடனும், பிறர் சிநேகத்துடனும், சகோதர மனப்பான்மையுடனும், பொறுமையுடனும் இச்சங்கத்தில் சேவைசெய்ய முன்வாருங்கள்" என்று அங்குகூடியிருந்த இளைஞரை அறைகூவி அழைத்தார்.

சுவாமியவர்கள் இச்சங்கத்தின் நோக்கத்தையும், கடமைகளையும், இயங்கும் ஒழுங்குகளையும் விளக்கியபின் இச்சங்கத்துக்கு உத்தியோகத்தர்தெரிவு நடைபெற்றது. இச்சங்கத்தின் தலைவராக செல்வன் போல் பெரேராவும், உபதலைவராக செல்வி மேட்டல் கொறேராவும், செயலாளர்களாக செல்வன் ஸ்ரான்லி பாலிஸ், செல்வன் சுனில் நாணயக்காரா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இக்கூட்டத்துக்கு நுவரெலியா உதவிக்கட்டளைக்குரவர் வண. பீரிஸ் சில்வா, ஓ. எஸ். பி. அடிகளார் தலைமைவகித்தார். நல்லாயன் கன்னியர்மட சிரேஷ்டதாயார் சங். யூரேஷியா அன்னையாரும், புனிதசவேரியார்கல்லூரி ஆசிரியர்களும், வேறுபல ஆசிரியைகளும் சமுகமளித்தனர். புனிதசவேரியார் கல்லூரிமாணவர்களும், இளைப்பாற்றிமாதா கன்னியர் மடம், நல்லாயன் கன்னியர்மடங்களைச் சேர்ந்த மாணவிகள் உட்பட சுமார் இருநூறுமாணவ மாணவிகள் கூட்டத்துக்குச் சமுகமளித்தனர். கூட்டம் இளைப்பாற்றிமாதா கன்னியர் மடத்தில் நடைபெற்றது. தமிழ், சிங்கள இளைஞர்யாவரும் ஒருமித்து இயங்குவதென்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

### புதிய அரசாங்க அதிபர்

சிறிது காலத்திற்குமுன் துறைமுக கார்ப்பறேஷனின் உதவிப் பொது மனேஜராகக் கடமையாற்றிய திரு. வி. பி. வித்தாச்சி யாழ்ப்பாண அரசாங்க அதிபராக நியமனம் பெற்று வந்து தனது பதவியைக் கையேற்றிருக்கின்றார்.

### மூன்று இடைத்தேர்தல்கள்

சனப்பிரதிநிதிகள் சபையிலே காலியாயிருக்கும் மூதூர், அநுராதபுரம், வெலிமடையாகிய மூன்று ஸ்தானங்களுக்கும் புதிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான இடைத்தேர்தல்களை அடுத்த மூன்றுமாதகாலத்தில் நடத்திவைக்க அரசாங்கம் கருதுகிறது. இம்மூன்று தொகுதிகளினதும் வாக்காளர் இடாப்புகள் ஏற்கனவே தயாராகியுள்ளன.

### அரசாங்க தமிழ்ஊழியர்

இலங்கை அரசாங்கசேவையிலுள்ள சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பேர்க்கர் ஆதியோரின் தொகையையும், அரசாங்க ஊழியர்களின் மொத்தத் தொகையையும் அரசாங்க புள்ளிவிபரப்பகுதி தற்போது கணக்கெடுத்து வருகின்றது. பாதுகாப்பு – வெளிவிவகார மந்திரி காரியாலய நிரந்தரகாரியதரிசியின் உத்தரவின்பேரிலேயே இக்கணக்கு எடுக்கப்படுகிறது.

### நெல்லிக்காய் இரசம்

விற்றமின் 'சி' சத்துள்ள பானமொன்றை யாழ்ப்பாணம் தோலகட்டிச் செபமாலைத்தாசர் ஆச்சிரமம் நெல்லிக்காயிலிருந்து தயாரித்துவாலாயிற்று. இப்போது இதனை விவசாயப் பகுதியினரும் தயாரிக்கத் தொடங்கியிருக்கின்றனர். இந்த நெல்லிக்காய் இரசம் இடையிலே சத்துக்கெடாமல் நீண்டகாலத்துக்கு அதனைப் பாதுகாத்து வைப்பதுபற்றி விவசாயப்பகுதி ஆராய்ச்சிசெய்துவருகின்றது.

### கண்வங்கித்திறப்புவிழா

கொழும்புப் புதியகண்ணாஸ்பத்திரியிலே கொழும்பு லயன்ஸ்கிளப் நிறுவியுள்ள கண்வங்கியை உலக சுகாதார தினமாகிய சென்ற சனிக்கிழமைமாலை சுகாதார மந்திரி திறந்துவைத்தார். மக்களின் கண்பார்வையில் சிரத்தைகாட்டிக் குருடர்களின் நலனுக்காகச் சேவைபுரிவதே இதன் முக்கியநோக்கமாகும். தேவைப்பட்டோருக்கு இலவசமாகக் கண்ணாடி கொடுப்பதற்கும் இது ஒரு திட்டம் வகுத்துள்ளது. இறந்தபின் தங்களது கண்களை அன்பளிப்புச்செய்யுமாறு இந்தக் கண்வங்கியை ஸ்தாபித்துள்ள லயன்ஸ்கிளப் தலைவர் சகலருக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

### படித்த வாலிபருக்குப் பண்ணைகள்

யாழ்ப்பாணத்திலே படித்தவாலிபர்களுக்கென்று பண்ணைகள் அமைக்கத் தேவிபுரத்தையடுத்த நீர்ப்பாசனவசதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொருதொகுதிக்கும் ஐம்பதுஏக்கர்வீதம் வழங்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், உடுப்பிட்டி, பருத்தித்துறையாகிய ஐந்து தொகுதிகளுக்கு மட்டுமே தற்போது வழங்க உத்தேசித்திருக்கும் இந்தப் பண்ணைகளுக்கென்று ஒவ்வொரு தொகுதியிலுமிருந்து 25 படித்தவாலிபர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பண்ணைநிலப் பங்கீடுபற்றிய முடிவுகள் தெரியவந்ததும் அந்தந்தப்பகுதிக் காரியாதிகாரிகள் அவர்களைத் தெரிவுசெய்வார்களென்று சொல்லப்படுகிறது.

### சீனாவுக்காகப் பர்மா

சீனாவில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இந்தப்பஞ்சம் இலங்கைக்கும், சீனாவுக்குமிடையே இருந்துவரும் றப்பர் - அரிசி உடன்படிக்கையைப் பாதிக்கமாட்டாதென்று சீன அரசாங்கம் இலங்கைக்கு உறுதியளித்துள்ளது. உடன்படிக்கைப்படி இலங்கைக்கு அனுப்பவேண்டிய 20,000 தொன் அரிசியையும் அனுப்பிவைக்கப் பர்மாஅரசாங்கத்துடன் ஒழுங்குசெய்திருப்பதாகச் சீனா தெரிவித்துள்ளது.

### கட்டாய பாடமாகும்

1965-ம் ஆண்டு தைமாதம் 1-ந்திகதி தொடக்கம் சகல மாணவர்களுக்கும் சமயபாடம் கட்டாய பாடமாகுமென்றும், சகல மாணவரும் சமயபாடம் எடுத்தாக வேண்டுமென்றும், இப்பாடம் சம்பந்தமாகத் தற்போது மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளும், சகலவிதிவிலக்குகளும் அன்றுமுதல் நீக்கப்படுமென்றும் அரசினர் பாடசாலைகள், வித்தியாதிபதியின் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகள், உதவிபெறுத பாடசாலைகள் ஆகியவற்றின் தலைமையாசிரியர்களுக்கெல்லாம் வித்தியாதிபதி ஒரு சுற்றறிக்கை மூலம் தெரிவித்திருக்கின்றார்.

### பத்திரிகைகளும் ஒரு காரணம்

இலங்கையிலே பழிபாதகச் செயல்கள் அதிகரிப்பதற்குப் பத்திரிகைகளும் ஓரளவிலே குற்றஞ்சாட்டப்பட வேண்டியனவென்று பொம்புவெலா எனுமிடத்தில் சென்ற புதன்கிழமை நடைபெற்ற ஒரு பரிசளிப்பு விழாவில் ஸ்ரீ சோமானந்தா பண்ணசிகா தேரோ வென்ற புத்தகுருசாற்றி அவற்றின் மேல் குற்றஞ் சாட்டியிருக்கின்றார். தற்கொலைகளையும், மற்றும் இவை போன்ற தீச்செயல்களையும் பற்றிய விபரங்களைக் கொட்டையெழுத்து வரிகளிலே முழிப்பாக வெளியிடுவதானது இளைஞர்களின் வாழ்க்கையில் பிழையான ஒருமனப்போக்கை உண்டுபண்ணுகின்றது; திடுக்காட்டமும், கவர்ச்சியும் உண்டுபண்ணும் தலையங்கங்களைப் பத்திரிகைகள் போடுவதைத் தடுத்துவைக்கச் சட்டம் கொண்டுவரப்படவேண்டும்; பிள்ளைகள் மட்டிலே தங்கள் கடமைகள், பொறுப்புகளில் அநேகம்பெற்றோர் அசமந்தாய் இருக்கிறார்க"ளென்றும் அவர்கூறலாயினர்.

### கொழும்பு அதிமேற்றிராணியார்

திருச்சபைப் பொதுச்சங்க மத்திய ஆயத்தகமிஷனின் ஐந்தாவது தொடர் கூட்டத்திற்குச் சமூகமளிக்குமாறு இற்றைக்கு இரு வாரங்களின்முன் றோமாபுரிசென்றிருந்த கொழும்பு அதிமேற்றிராணியாராகிய அருட்பெருந்தகை தோமஸ்கூறே ஆண்டகை அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை சேமமே திரும்பவும் கொழும்புவந்து சேரலாயினர். உலகின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து கருதினல்மாரும், அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் இக்கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தார்கள். அங்ஙனம் சமூகமளித்தவர்களில் 42 கருதினல்மாரும், 1 பத்திரியாக்கும், 14 அதிமேற்றிராணிமாரும், 3 மேற்றிராணிமாரும், சந்நியாசசபைகளின் 3 அதிசிரேஷ்டர்களும் அடங்கியுள்ளார்கள். இந்தக் கூட்டத்தின் பொதுவிஷயம் "ஒசெர்வாத்தோறே றோமானோ" எனும் வத்திக்கான் பத்திரிகை அறிக்கையிட்டுள்ளபடி, திருச்சபையின் திருவழிபாட்டு முறைமையாகும்.

### புதிய விற்பனைவரி

ஆடம்பரப் பொருட்களின் மீதும், நாளாந்ததேவைக்கு அவசியமற்ற பொருட்களின் மீதும் விற்பனைவரி ஒன்றைவிதிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அடுத்த வைகாசிமாதம் 2-ந் திகதிமுதல் இந்த வரி அறவிடப்படும். இந்த விற்பனைவரி சம்பந்தப்பட்ட பொருட்களின் அட்டவணை ஒன்றை நிதிமந்திரி விரைவிலே வெளியிடவிருக்கின்றார். உணவுப் பொருட்கள், புடவைகள், எண்ணெய் வகைகள் ஆதியன தவிர்ந்த ஏனைய பொருட்களுக்கே விற்பனைவரி விதிக்கப்படும். தாங்கள் விற்பனைசெய்யும் இந்தப் பொருட்களுக்கான விற்பனை வரியை வியாபாரிகளே அறவிட்டு அதனை வருமானவரிப்பகுதியிடம் கட்டவேண்டும்.

### இராணுவம் வலசை வாங்குகிறது

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த ஒரு வருடகாலமாக இருந்துவந்த இராணுவத்தினரின் நடமாட்டம் ஏற்கனவே வெகுவாகக் குறைந்துவிட்டது. ஆங்காங்கு முகாமிட்டிருந்த இராணுவத்தினருள் பெரும்பான்மையினர் தங்கள் முகாங்களைவிட்டு வலசைவாங்கிவிட்டனர். ஆனையிறவிலே முகாமிட்டிருந்த இராணுவத்தினரும் தருவிக்கப்பட்டுவிட்டனர். ஆனால், சட்டவிரோதமான கள்ளக்குடியேற்றத்தைத் தடுக்குமாறு காங்கேசன் துறையிலும், கரையூரிலும் இராணுவத்தினர் நிரந்தரமாக இருக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

### அவசரகாலச் சட்டம்

சென்றவருடம் சித்திரை மாதம் 17-ந் திகதியன்று — அதாவது இற்றைக்கு 354 தினங்களின்முன் பிரகடனஞ் செய்யப்பட்ட அவசரகால நிலைமைச் சட்டவிதிகளிலே பெரும்பாலானவை சென்ற சனிக்கிழமையன்று தளர்த்தப்பட்டுள்ளன. அதனால், பத்திரிகைச் செய்தித் தணிக்கையும், பொதுக்கூட்டங்கள், பொது ஊர்வலங்கள், தாபனங்கள்மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளெல்லாம் நீக்கப்பட்டுள்ளன. ஆகவே, அகில இலங்கைத் தமிழரசுக்கட்சிமீது விதிக்கப்பட்டிருந்த தடையும் நீங்கியுள்ளது. இன்னும் வதந்திகள், பொய்யான அறிக்கைகளைப் பிரசுரிப்பது, பொது மேடைகளிலே சொற்பொழிவுகள் நிகழ்த்துவது, துண்டுப்பிரசுரங்களை வழங்குவது ஆகியவற்றின்மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளும் நீங்கின. இனிமேல் பாராளுமன்ற உபதேர்தல்கள் நடைபெறக்கூடிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

### எல்லாம் அறிந்தவர்கள்போல்

துரதிர்ஷ்டவசமாய்ச் சாதாரண பேர்கள் மந்திரிகளாகுமிடத்து எல்லாம் அறிந்தவர்களைப்போலும், தாங்கள் அறியவேண்டியது இனி ஒன்றுமில்லையென்றாற்போலும், கட்சியுடன் வாரப்பாடானவர்களைத்தவிர மற்றெவருக்கும் எதையிட்டும் செவிசாய்க்கவேண்டிய அவசியமில்லையென்றாற்போலும் தங்களைக் காட்டிக்கொள்ளுகிறார்கள்; இப்போது மந்திரிகளாயில்லாத முன்னாள்மந்திரிகள் அநேகர் எவர் பேசினாலும்சரி, எதைப் பேசினாலும்சரி, வந்துகேட்பதற்கு எப்போதுமே தயாராயிருந்தார்கள்; பதவியிலிருக்கும்போது இவர்களும் இந்த மனப்பான்மையைக் கொண்டிருந்தால் இவர்களின் நிலைமை வேறு விதமாய் இருந்திருக்குமென்று இலங்கைத் தேசிய கைத்தொழில்சங்கத்தின் தலைவராயிருந்துவந்த திரு. சிறில் ஈ. எஸ். பெறேரா, கியூ. சி. அதன் முதலாவது வருடாந்த கூட்டத்தில் அன்று பேசியபோது குறிப்பிட்டிருக்கின்றார்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 4068

சிவாஸ்திபிளேஸ், சுண்டிக்குளி
E. V. K. எதிர்மன்னசிங்கி
— வழக்காளி.

எதிராக

சிதம்பரநாதன் செட்டியார் முத்துக்குமாரன் செட்டியார்
ஆசிரியர், இந்துக்கல்லூரி, வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 4068-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆல் வைகாசிமீ 11-ந்உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,310|00-உம், 13-6-61 தொடக்கம், 11-10-61 வரைக்கும் 12வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 174ரூபா 27சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, வண்ணார்பண்ணை தென்மேற்கு "மூளாயினன்வயல்" நெற்பரப்பு 1, குளி $5\frac{2}{31}$. கடையனைகள் இலக்கம் $\frac{99}{2}$-ம் 95. எல்லை: கிழக்கும், வடக்கும் — S. சோமசுந்தரத்தின் ஆதனம். மேற்கு — S. செகராயசேகரத்தின் ஆதனம். தெற்கு — ஆஸ்பத்திரி றேட்டு.

ஆ. ச. இராசேந்திரம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
யாழ்ப்பாணம்

கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M: B. 3597

உரும்பிராய் வடக்கு
கந்தையா சின்னத்தம்பி
— வழக்காளி.

எதிராக

கோப்பாய் தெற்கு, யாழ்ப்பாணம்
சுவாமிநாதன் சுப்பிரமணியம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3597-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆல் வைகாசிமீ 12-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 10,666/64-உம், 1-9-60 தொடக்கம், 29-11-60 வரைக்கும் ரூபா 8,000-க்குப் 10வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 317ரூபா 90சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு, கோப்பாய்தெற்கு "அடிச்சேரி" நிலப்பரப்பு நாலு (நி. ப. 4). ஆட்சிப்படி ஆறு (6)-உம், கிணறும், பழைய புதியகட்டிடங்களும், அடுக்களை, குடிசைகளும், மலகூடமும், மற்றும் அதற்குரியவைகளும். எல்லை: கிழக்கு — யாழ்ப்பாணம் பருத்தித்துறை றோட்டு. வடக்கு கனகரத்தினம் பெண் வள்ளியம்மைக்கும், சுவாமிநாதர் சுப்பிரமணியத்திற்கும் உரியஆதனங்கள். மேற்கு — பழைய தெரு. தெற்கு — ஒழுங்கை.

ஆ. ச. இராசேந்திரம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### சித்திரை மாதம் — 1962

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | ஞா. | 1 | **குருத்தோலைஞாயிறு** (வி. ம.) (திருச்சிலுவை முகவுரை) | ஊ |
| 16 | தி. | | பெரிய திங்கள் | ஊ |
| 17 | செ. | | பெரிய செவ்வாய் | ஊ |
| 18 | பு. | | பெரிய புதன் | ஊ |
| 19 | வி. | | பெரிய வியாழன் | வெ |
| 20 | வெ. | | பெரிய வெள்ளி | க |
| 21 | சனி | | பெரிய சனி | வெ |

சத்திய வேத
பாதுகாவலன்

1962-ம் ஆண்டு
சித்திரை மாதம் 15-ந் திகதி

## கல்விப் பிரச்சினை

ஆட்சிபீடத்திலே இன்றைய அரசாங்கம் என்றுஅமர்ந்ததோ அன்று முதல் எமதுநாட்டில் ஒன்றின்பின்ஞென்ருய் எழுந்தபிரச்சினைகளோ இம்மட்டென்று பகருந்தரமன்று. ஆய்ந்தோய்ந்துபாராது எழுந்தமானமாகப் பலதுறைகளிலும் அதுஇறங்கியதால் பலபிரச்சினைகளைத் தாஞகவே வலிந்து தேடிக்கொண்டது. அங்ஙனம் தேடிக்கொண்டபிரச்சினைகளும் வேறுஎத்தனையோ பிரச்சினைகளுக்கு வழிதிறந்துவிடலாயின. அவற்றில்ஒன்று, மொழிப்பிரச்சினை. இது சமரசமாகத் தீர்க்கப்படாதவரை—தமிழ்ப்பேசும்மக்களின் மொழியுரிமை மறுக்கப்பட் டிருக்கும்வரை எமதுநாட்டின் இருபெரும் சாகியங்களான சிங்களவரும், தமிழரும் ஒற்றுமையாக வாழ்வதும், ஒத்துழைப்பதும் அசாத்தியமாகும்.

மொழிப்பிரச்சினைபோக, மற்ருென்று பொருளாதாரப் பிரச்சினையாகும். உலகசந்தையில் தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் ஆதியவற்றின்விலைகள் வீழ்ச்சியடைந்தமையால் நாட்டின்பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டுக்கு முக்கியவருமானத்தைக் கொடுத்துவந்த இவற்றின் விலைவீழ்ச்சிகாரணமாக அரசாங்கத்தின் நிதிநிலைமை அதிகம் கேவலமாகியுள்ளது. இன்னும் வேலைநிறுத்தங்களாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும், படித்தவாலிபர்கள் பிழைக்கும்வழி காணுது குடும்பங்களுக்கும், நாட்டுக்கும் பெரும்பாரச்சுமையாய் இருந்துவருவதாலும் நாட்டின் பொருளாதாரவளம் நலிந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நாட்டினை எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப்பிரச்சினை சுமுகமாகத்தீர்க்கப்படின் அது எத்தனையோ பிரச்சினைகளைத் தாஞகவே இலகுவாய்த் தீர்த்துவிடும். நாட்டுமக்கள் சகலரும் இனமத பேதமின்றிக் கைகோர்த்துக்கொண்டு நாட்டின் தொழில்விருத்திக்கும், பொருளாதார விருத்திக்குமாக ஒத்துழைக்கமுயன்ருல் அதனைப் பொருளாதார வளம் பெருகும் ஒருநாடாக்கிவிடலாம்.

நிற்க, தேசீயகல்விக்கமிஷன் நியமித்த உபகுழுஒன்று செய்துள்ள சிபாரிசிலே, தனிப்பட்ட பாடசாலைகளையெல்லாம் — அவைகள்கட்டணம் அறவிடுவனவாய் இருந்தாலென்ன, கட்டணம் அறவிடாதனவாய் இருந்தாலென்ன, எல்லாவற்றையும் முற்ருக உடனேதானே அரசாங்கம் எடுக்கவேண்டுமெனக் கேட்டிருக்கின்றது. இன்னும் தனதுசிபாரிசில் தேசீய கல்வித்திட்டத்தின்கீழ் இனிமேல் தனிப்பட்டபாடசாலைகளுக்கு இடமேயில்லையென்றும் அது தெரிவித்திருக்கின்றது. அதன் சிபாரிசைக் கமிஷனிலுள்ள பெரும்பான்மைஅங்கத்தவர்கள் அங்கீகரிப்பார்களென்று சொல்லவேண்டியதில்லை. ஏனெனில், நாம் பலமாதங்களின்முன்னரே எதிர்பார்த்திருந்ததுபோல், கிறீஸ்தசமயத்துக்கு விரோதமான கருத்துகளைத் தங்களது உள்ளத்தில்கொண்ட பெருந்தொகையினரை அடக்கிய தேசீயகல்விக்கமிஷன் இந்தச்சிபாரிசை அங்கீகரிக்குமாஞல் அதையிட்டு எவருமே ஆச்சரியப்படவேண்டியதில்லை. அங்ஙனமாக, தாங்கள் கையிடவெண்ணும் கருமங்களைச் சாதிக்குமாறு "காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கொள்கை"களையே நாங்கள் கடைப்பிடிக்கிறேமென்று முறைக்குமுறை கூறிக்கொள்ளும் மந்திரிமாரும், அரசாங்ககட்சியினரும் இந்தச்சிபாரிசை அங்கீகரிப்பார்களா? "காலஞ்சென்ற தனது கணவரின் அடிச்சுவடுகளையே பின்பற்றுவதாகப் பகிரங்கமாக உறுதிவாக்களிக்கும் பிரதமர்சிறிமா இந்தச்சிபாரிசை ஏற்றுக்கொள்வாரா? ஆகவே, கல்விப்பிரச்சினை சம்பந்தமாய்க் காலஞ்சென்றபிரதமர் பண்டாரநாயக்கா யாது கூறிவந்தார்? என்றகேள்வி இந்தவேளை எழுகின்றது.

1958-ம்ஆண்டு பங்குனிமாதம் போறளையில்கூடிய அகில-இலங்கை ஐக்கியபிக்குகளின் மகாநாடானது, சகலபாடசாலைகளையும் அரசாங்கம் எடுக்கவேண்டுமென வற்புறுத்தியது. அப்போது திரு. பண்டாரநாயக்கா யாது கூறிஞர்? "புத்தசமயத்தின் உரிமைகளைப் பாதுகாக்க் நான் முயலும்போது மற்றவர்களுக்கு உயிர் போகும்படியாக அடிக்கிறநோக்கம் கொள்ளமாட்டேன்" எனக் கூறிநின்ருர். 1959-ம்ஆண்டு ஆவணிமாதம் 15-ந்திகதியன்று — அதாவது அவர் மரிப்பதற்கு ஒருமாதத்தின்முன் தன்னைப்பேட்டிகாணவந்தபுத்தகாங்கிரஸ் தூதுக்கோஷ்டிஒன்று சகலபாடசாலைகளையும் அரசாங்கபாடசாலைகளாக்கும் திட்டம்ஒன்றை வகுக்கவேண்டுமென்று வற்புறுத்தியது. அப்போது திரு. பண்டாரநாயக்கா யாதுசாற்றிஞர்? உங்களுடன் இதுவிஷயமாய் நான் ஒத்துப்போகிறதாய் இருந்தாலும் சிந்திக்கவேண்டிய பிறகருமங்களும் இருப்பதாக உணருகிறேனெனக் கூறிநின்ருர். 1947-ம்ஆண்டு வைகாசிமாதம் 15-ந்திகதியன்று அவர்நிகழ்த்திய ஒருசொற்பொழிவிலே, பாடசாலைகளை அரசாங்கம்எடுப்பதைத் தான் எதிர்ப்பதாக அழுத்தம்திருத்தமாகத் தெரிவித்திருக்கின்ருர், இவ்வாறெல்லாம் அவர் ஒருமுறையல்ல, இருமுறையல்ல, மும்முறைகூறியிருக்கும்போது அவருடையகொள்கைகளையே —அவரது அடிச்சுவடுகளையே பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் பிரதமர் சிறிமாவும், மந்திரிமாரும், மற்றும்அரசாங்க கட்சியினரும் தேசீயகல்விக்கமிஷனின் உபகுழுசெய்துள்ள சிபாரிசை ஒப்புக்கொள்ளுமிடத்து மேலும் பல சங்கடமான பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிவரும். அப்போது நாட்டுமக்களிடையே மனவமைதிக்குப் பின்னரும் பங்கமேற்படுமென்று எடுத்துக் கூறவேண்டியதில்லை.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

யாழ்ப்பாணம்
பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே
நிறைவேற்றப்படும்

## பரிசுத்தவாரத் திருச்சடங்குகள்

**1962 சித்திரை 15-ந்தேதி குருத்தோலைஞாயிறு**

காலை 7 மணிக்குக் குருத்தோலைப் பவனியும், மேற்றிராணி ஆண்டவரின் பூசையும்.

**சித்திரை 19-ந்தேதி பெரிய வியாழக்கிழமை**

காலை 6-15 மணிக்கு மேற்றிராணிஆண்டவரின் பரிசுத்த தைலங்கள் ஆசீர்வதிக்கும் பூசை.

மாலை 6-00 மணிக்கு மேற்றிராணிஆண்டவரின் இராப் போசன ஞாபகப் பாடற்பூசை.

மாலை 11 மணிக்குத் திருமணித்தியாலம்

**சித்திரை 20-ந்தேதி பெரிய வெள்ளிக்கிழமை.**

பிற்பகல் 4-00 மணிக்கு ஆண்டவருடைய திருப்பாடுகளினதும், மரணத்தினதும் திருச்சடங்குகள் மேற்றிராணி ஆண்டவரால் நிறைவேற்றப்படும்.

மாலை 5-30 மணிக்குச் சிலுவைப்பாதையும், சிலுவைமுத்திசெய்தலும்.

**சித்திரை 21-ந்தேதி பெரிய சனிக்கிழமை.**

காலை 6-30 மணிக்குப் பரிசுத்த தேவதாயின் ஏழுவியாகுலங்களைப் பற்றிய தியானம்.

மாலை 10-45மணிக்குப் பாஸ்காவிழிப்புத் திருச்சடங்குகளும், மேற்றிராணிஆண்டவரின் பெரிய பாடற்பூசையும்.

**சித்திரை 22-ந்தேதி பாஸ்குஞாயிறு.**

காலை 5-30 மணிக்கு முதற்பூசை.
காலை 7-15 மணிக்குப் பாடற்பூசை.
காலை 8-30 மணிக்கு மூன்ரும்பூசை.
மாலை 4-30 மணிக்கு வேஸ்பரும், ஆசீர்வாதமும்.
மாலை 6-00 மணிக்குப் பின்னேரப்பூசை.

கட்டளைக்குரவர்.

## அன்பின் பலி

பாவத்தால் கெட்டழிந்த மனுக்குலத்தை மீட்பதற்குக் கடவுள் சித்தமானுர், கடவுள்தாமே மனிதஞகி, மனுக்குலம்முழுவதும் செய்த பாவத்தைத் தம்மேற் சுமந்தார். தம்மாற் தெரிந்துகொள்ளப்பட்ட யூதசனங்களே தம்மைப் புறக்கணித்ததைக்கண்டு மனம் வருந்திஞர். திவ்வியயேசு முப்பத்துமூன்று வருடகாலமும் இவ்வுலகில் தமது சீரிய வாழ்க்கையிஞலும், அமிர்த பிரசங்கங்களிஞலும், எண்ணிறந்த புதுமைகளிஞலும், தமது இரக்கத்தைக் காண்பித்து யூதமக்களை மனந்திருப்ப, தமது தூதை வெளிப்படுத்த, தாம் கொண்டுவந்த நற்செய்தியை அவர்கள் அறியச்செய்ய பெரும் பாடுபட்டார். எல்லாம் வீணுகியது. பரமபிதாவின் சித்தப்படி கசப்பான பாத்திரமாகிய சிலுவைமரணத்தை ஏற்ருர். கள்வனைப்போல் கரத்திலும், கழுத்திலும் சங்கிலிபூட்டப்பட்டு யெருசலேம்வீதிவழியே நிந்தையாய் இழுத்துச்செல்லப்பட்டார்; தமது சீடர்களால் கைவிடப்பட்டார். உரோமையரான அன்னியர்கையால் ஐயாயிரத்துக்கதிகமாய், ஓர் அடிமைபோல் அடிபட்டார். துஷ்டரால் ஆகடியம்செய்யப்பட்டார். பைத்தியகாரனென்று வெள்ளை ஆடை போர்த்தப்பட்டார். தலையிலே எழுபத்திரண்டு முட்களால்ஆன முள்முடி சூட்டப்பட்டார். மூங்கிற்செங்கோல் கொடுக்கப்பட்டார். தோலோடுஒட்டிய ஆடை களற்றப்பட்டு "இதோ மனிதன்" என்று காட்டப்பட்டார். பாரச்சிலுவை சுமத்தப்பட்டு, பரிகாசமாகக் கல்வாரிமலை என்றகொலைக்களத்துக்குச் சிலுவையில் அறைந்து கொல்வதற்காக இழுத்துச்செல்லப்பட்டார், சிலுவையில் அறையப்பட்டார், இரண்டுகள்வருக்கிடையில் நிறுத்தப்பட்டார். மூன்று மணிநேரம் சிலுவையில் மரணஅவஸ்தைப்பட்டு உயிரைப் பலியாக்கினார்.

யேசு எவ்வளவு நல்லவர். அவரது பொறுமைதான் அளவிடமுடியுமா? அவரது இரக்கத்துக்குக்கரைகாண முடியுமா? அவரதுஅன்பிற்கு ஆழம் அறிய இயலுமா? "பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிருர்கள்" என்று தம்மை வாதிக்கிறவர்களுக்காக இரக்கப்பட்டுப் பரிந்துபேசுகிருர். கடைசித்துளி இரத்தம் வரை தமக்கெனவையாது எமக்காகச் சிந்திஞரே யேசு. தமது விலாவை ஈட்டிப்பிடங்கால் குத்தித்திறந்த கல்நெஞ்சனுக்குக் கூடக் கருணைகாட்டுகிருர். கருணையோடு நன்மையும் செய்கிருர். தீமைசெய்தவர்களை நேசிக்கிருர்.

இன்று யேசு எம்மைப்பார்த்து என்ன சொல்லுகிருர்? "நான் இவ்வளவு பாடுகள்பட்டு, கொடியமரணமடைந்தும் மனிதர் நன்றிகெட்டவர்களாய் நடக்கிருர்கள்" என்றுதான் அவர் மனம்வருந்துகிருர். உலகம் பாவத்தால்நிறைந்து வருகிறது. அவரது திருஇரத்தப் பலன்களை அலட்சியம்செய்துவருகிறது. கிறிஸ்தவர்களே அவரை அசட்டைசெய்கிருர்கள்.

இப்பரிசுத்த வாரத்திலே யேசுவின் திருஇருதயத்துக்கு மக்கள்வருவித்த நிந்தைகளுக்குப் பரிகாரம் செய்வோமாக. பாடுபட்ட திருச்சுரூபத்துக்கு அதிவணக்கம்காட்டி ஆராதனைசெய்வோம். பெரியவெள்ளிக்கிழமை அன்பின்பலியான யேசுவுக்கு, சிலுவையில் அறையுண்ட நாதருக்கு திருச்சபை திவ்வியநற்கருணைக்குக்காட்டும் வணக்கத்தைக் காட்டுகிறது. மும்முறை திருச்சிலுவைக்கு ஆசாரம்செய்து திருச்சிலுவையை முத்திசெய்கிறேம். இத்தினத்திலே நாம் நமது மனதாலும், உடலாலும், நமது ஒவ்வொரு அவயவங்களாலும் நமது நேச இரட்சகருக்கு விரோதமாய்ச்செய்த பாவங்களை நினைத்து மனஸ்தாபப்பட்டுப் பாவப்பரிகாரம் செய்வோம்,

— அன்ரன் கிறிஸ்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் —

### வியாக்கியானக் குறிப்புகள்

### (II) அர்ச். கன்னிமரியம்மாளுடைய திருமணம் 1: 26-27

[ தொடர்ச்சி ]

**27.** "இவை யாவும் ஆண்டவர் தீர்க்கதரிசியால் மொழிந்தது நிறைவேறும்படி ஆயிற்று. அவர் சொல்வதேதெனில்: ஒருகன்னி கெர்ப்பந் தரித்து ஒரு புத்திரனைப் பெறுவாள். அவருக்கு இம்மனுவேல் என்னும் நாமமிடுவார்கள்" அதற்குச் சர்வேசுரன் நம்மோடு என்றர்த்தமாம். (இசை.7 : 14—61 : 1).

இந்தத் தீர்க்கதரிசனத்தின்படி, உலக இரட்சகரைப் பெறவேண்டியவள் கன்னிகாஸ்திரியாயிருக்க வேண்டியிருக்கையில், அர்ச். கன்னிமரியம்மாள் விவாகஞ் செய்வதற்கு மூன்று காரணங்களிருந்தன:

(அ) புருஷனின்றிப் பிள்ளையைப் பெற்று, விபசாரியென்று பேரெடுக்காதபடி விவாகஞ் செய்யவேண்டியிருந்தது.

(ஆ) யூதர்களுடைய முறைமைப்படிக்கு வம்சவரிசை புருஷன் வழியாக மாத்திரம் குறிப்பிடப்படும். ஆகையால் யேசுநாதர் தாவீதுகோத்திரத்தில் பிறப்பார் என்று தீர்க்கதரிசனங்களிற் சொல்லப்பட்டிருந்ததினால் அர்ச். கன்னிமரியம்மாளுக்குத் தாவீது கோத்திரத்திலுள்ள ஒரு பத்தா வேண்டியிருந்தது.

(இ) உலகஇரட்சகருடையபிறப்பு பசாசுக்குத் தெரியாதிருக்கும்படி கன்னிமரியம்மாள் விவாகஞ்செய்ய வேண்டியிருந்தது என்று சில திருச்சபைப் பிதாக்கள் கூறுகின்றனர். அர்ச். கன்னிமரியம்மாள் விவாகஞ் செய்தாலும் அவள் எப்பொழுதும் கன்னிகாஸ்திரியென்பது சத்தியம்.

**விவாகபந்தனமான:** கிரேக்க மொழியின் கருத்துப்படி இந்தச் சொற்களை விவாகப்பந்தனத்துக்கு அல்லது திருமணத்துக்கு ஏற்றுக்கொள்ளலாம். யூதருடைய வழக்கத்தின்படி விவாகபந்தனம் தூய்மையான ஓர் ஒப்பந்தம். அர்ச். லூக்காஸ் இந்த எண்ணத்தோடுதான்— "சூசையப்பர் .. தம்முடைய மனைவி மரியம்மாளோடு பேர்பதியும்படியாக... பெத்லேம் என்னும் தாவீது நகரத்துக்குப் போனார் (லூக். 24:5).

**சூசையப்பர் என்னப்பட்ட** ஒரு மனிதனுக்கு: சக்கரியாசைப்போல் அர்ச். சூசையப்பரும் நீதிமானாயிருந்தார் (மத். 1:19). "சூசையென்பவர் நீதிமானாயிருந்ததினாலும்". (வேதாகமங்களில் நீதிமான் என்பது புண்ணியவான் என்று அர்த்தங்கொள்ளும்).

**தாவீதின் கோத்திரத்தாராகிய:** மெசியா தாவீதின் கோத்திரத்திலிருந்து பிறப்பார் என்று தெளிவாக முன்னறிவிக்கப்பட்டது. (2 அரச. 7:12, 13. "பிறகு உன் சீவியநாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களுடன் நித்திரை பண்ணும்போது, நாம் உனக்குப் பின்பு, உன் கர்ப்பப் பிறப்பாகிய ஒரு குமாரனை எழும்பப் பண்ணி அவன் இராச்சியத்தை நிலைப்படுத்துவோம். அவனே நமது நாமத்திற்கென்று ஓர் ஆலயத்தைக் கட்டுவான். நாமோ அவனுடைய இராசரீக சிம்மாசனத்தை என்றைக்கும் நிலைத்திருக்கப்பண்ணுவோம்." இந்தத் தீர்க்கதரிசனம் தாவீதின் சாதாரண கோத்திரத்தாரைக் குறிக்கிறதில்லை. யூதவேதபாரகர் இத்தீர்க்கதரிசனம் மெசியாவைக் குறிக்கிறதென்று நினைத்தார்கள்).

**மரியம்மாள்:** அர்ச். ஏரோணிமுசின் அபிப்பிராயத்தின்படி இந்தப் பெயர் எபிரேய பாஷையில் 'மிரியம்' என்ற சொல்லிலிருந்து பெறப்படுகிறது. அதன் அர்த்தம் 'சமுத்திரத்தின் நட்சத்திரம்' அல்லது 'கசப்பான கடல்' என்பதாகும். கல்தியபாஷையில் 'சீமாட்டி' என்று அர்த்தங்கொள்ளும். இந்த மூன்று பட்டங்களும் மேன்மையான விதமாய் தேவமாதாவுக்குப் பொருத்தமுள்ளவை. அவவை நாங்கள் 'எங்கள் சீமாட்டி' (Our Lady) என்று வேண்டிக்கொள்ளுகிறோம். அவவுடைய துக்கம் சகலசிருட்டிகளினதும் துக்கத்தைப் பார்க்கிலும் மேம்பட்டது. அவ, ஒரு பிரகாசிக்கும் நட்சத்திரத்தைப் போல், தமது பிள்ளைகளுக்கு யேசுவின் பாதங்களுக்கு வழிகாட்டுகிறா.

அர்ச். கன்னிமரியம்மாளுடைய இளம்பராயத்தைப்பற்றிச் சுவிசேஷத்தில் எவ்வித குறிப்புமில்லை. பாரம்பரியத்தின்படி அர்ச். சுவக்கினுக்கும், அர்ச். அன்னம்மாளுக்கும் ஒரே ஒரு பிள்ளை. யூதருடைய வழக்கத்தின்படி தேவாலயப்பணிக்குச் சிறிதுகாலத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தாள். 14ஆம் வயதில் திருமணஞ்செய்தாள். பாரம்பரியத்தின்படி அவள் தாவீதின் கோத்திரத்தைச் சேர்ந்தவள்.

(iii) கிறிஸ்துநாதருடைய பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது 1 : 28—38.

**28.** தேவதூதன் அவளிருந்த இடத்திற் பிரவேசித்து: அர்ச். கன்னிமரியம்மாள் செபஞ்செய்து கொண்டிருந்த அறைக்குள் பிரவேசித்து (இந்தச் சம்பவம் பங்குனி மாதம் 25-ந் திகதி நடுச்சாமத்தில் நடந்திருக்கும் என்று கருதப்படுகிறது) சருவேசுரனிடமிருந்து செய்தியைக் கொண்டு வந்தார்.

**வாழ்க:** எபிரேயமொழியில் ("ஷலோம்") இவ்வார்த்தைக்கு அர்த்தமென்னவெனில், "உமக்குச் சமாதானம்" (அல்லது சந்தோஷம்) உண்டாவதாக என்பதாம். இந்த வார்த்தை தேவதூதன் சமாதான தூதாக அனுப்பப்பட்டாரென்று காட்டுகிறது. தேவதூதனின் சந்திப்பில்:

அவருடைய வாழ்த்துதல்

யேசுநாதருடைய பிறப்பின் முன்னறிவிப்பு

அர்ச். கன்னிமரியம்மாளுடைய கேள்விக்கு மறுமொழி என்பவை அடங்கியிருக்கின்றன.

**பிரியதத்தத்தினாலே பூரணமானவளே:** இந்த வார்த்தைகள் சில கத்தோலிக்கரல்லாத நூலாசிரியருடைய அபிப்பிராயத்தின்படி, "பெயரளவில் ஆசீர்வதிக்கப்பட்டவள் மாத்திரமல்ல, ஆனால் அருள் நிறைந்தவள்" என்ற அர்த்தமுங் கொள்ளும். இந்த வார்த்தைகளை இந்த விதத்தில் வியாக்கியானஞ் செய்வதற்குத் திருச்சபைப் பிதாக்களின் அபிப்பிராயமும் கத்தோலிக்கரல்லாத நூலாசிரியர் பலரின் அபிப்பிராயமும் இணங்கி வருகின்றன. இவ்வார்த்தைகளில் மரியம்மாளின் மாசில்லாத உற்பவமும், பூரண பரிசுத்ததனமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளனவென்று திருச்சபை திட்டமாக வியாக்கியானம் செய்துள்ளது.

**கர்த்தர் உம்முடனே:** இது முன்னைகாலத்தின் வரவேற்றல் முறை. (பழைய ஏற்பாட்டில், நியா. 6 : 12; ரூத்தாகமம் 2 : 3—4). இந்த வார்த்தையின்படி அர்ச். கன்னிமரியம்மாள் தேவனிடமிருந்து மேலான வியக்கத்தக்க உதவி பெற்றாள். இந்த விசேஷ வரத்தின் நிமித்தம் பாவத்திலிருந்து காப்பாற்றப்பட்டு வரப்பிரசாதம் நிறைந்தவளாய் அதி மேன்மையான நிறைவேற்றத்துக்குத் தகுதியுள்ளவளானாள். ஆகையால், தேவன் அர்ச். கன்னிமரியம்மாளுக்கு அதி உயர்வான காரணத்துக்காக இந்த வரப்பிரசாதங்களை அளித்தபடியால் (அதாவது தமது குமாரனுடைய மனித அவதாரத்தின் நிமித்தம்) சகல சிருஷ்டிகளுக்குக் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதங்களுக்கும் மேலான வரப்பிரசாதங்களாயிருக்கின்றன.

**ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே:** சில திருச்சபைப் பிதாக்கள் இந்த வார்த்தைகளை இச்சந்தர்ப்பத்தில் எடுத்துப் பேசுகிறார்கள். ஆனால் வத்திக்கான் சுவடியிலும் சீனாயிற்றிக் (Sinai ticus) சுவடியிலும் இவ்வார்த்தைகள் காணப்படவில்லை.

**ஸ்திரீகளுக்குள்ளே:** சகல ஸ்திரீகளைப்பார்க்கிலும் அர்ச். கன்னிமரியம்மாளில் முந்திய சாபம் மாற்றப்பட்டது. (ஆதி 3 : 16—ஸ்திரீயை நோக்கி உனக்குத் துன்பங்களையும் கர்ப்ப வேதனைகளையும் அதிகப்படுத்துவோம்.) உலகமுண்டானது முதல் உலகமுடியுமட்டும் உண்டான ஸ்திரீகளுக்குள்ளே அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருந்தாலும், எல்லாருக்கும் மேலாக நீர் மாத்திரம் விசேஷமாய் ஆசீர்வதிக்கப்பட்டவளென்றும் தேவதூதன் வசனிக்கிறார். ஓர் தேவதூதனால் இப்படிப்பட்ட புகழ்ச்சி சொல்லப்படுவதைப் பார்க்க மேலான மகிமை வேறேது?

## இதோ சிலுவைமரம்......

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

அடையாதிருக்கும் கோடிக்கணக்கான ஆன்மாக்களுக்காகவும் திருச்சபையோடு கூடி நாமும் இப்பரிசுத்தவாரத்தில் அதிகமாக மன்றாடக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.

கிறிஸ்துநாதர் "மரண அதிபதியாகிய பசாசைத் தமது மரணத்தால் நிர்மூலமாக்கி, மரணபயத்தினாலே சீவிய காலமெல்லாம் அடிமைத்தனத்திற்கு உள்ளாயிருந்தவர்களை மீட்டு இரட்சித்து" (எபி. 2 : 14—15), நம்பிக்கையை அவர்கள் உள்ளத்தில் ஊன்றியுள்ளார். எவ்வாறெனில், அவர் சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிந்தமையினால் சருவேசுரன் "அவரை உயர்த்தி எல்லாநாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்கு அளித்து, யேசுவின்நாமத்திற்குப் பரமண்டலத்தாரும், பூமண்டலத்தாரும், பாதாளத்தாருமாகிய சகலரும் முழந்தாட்படியிடப்பண்ணினார்" (பிலி. 2 : 9—10). அவ்வாறே, நாமும், "அவருடனே கூட மரித்தோமாகில் அவருடனே கூட உயிர்வாழ்வோம். அவரோடு கூடப் பாடுபட்டால் அவரோடுகூட அரசாளுவோம்" (2 தீமோ. 2 : 11—12). "ஆண்டவரே! உமது சிலுவையை நாங்கள் ஆராதிக்கின்றோம்!

## 8-ம் வருட மரணஞாபகம்



பிறப்பு: 24-6-1936 இறப்பு: 21-4-1954

எங்கள் அருமை மகனும், நேசச் சகோதரனும், அருமை மருமகனுமாகிய ஜெயநாதன் ஜேம்ஸ் பரமபதமடைந்த 8-ம் வருடம் 21-4-62-ல் பூர்த்தியாகிறது. இவரது ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பெற்றார், சகோதரர், இனசனர்

சில்லாலை

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3176

வண்ணார்பண்ணை கிழக்கு,
இளையதம்பி வைத்திலிங்கம்
— வழக்காளி,

எதிராக

புங்குடுதீவு மேற்கு
அப்பாக்குட்டி சபாபதிப்பிள்ளை
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 3176-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை, 1962-ம்ஆண்டு வைகாசிமீ 19-ம்வ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3507-ம், 4-12-59 தொடக்கம் 5-4-61 வரைக்கும் ரூபா 2000-க்கு 12வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவில் ரூபா 150 கொடுபட்டிருக்கிறது. மிகுதி விடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "செம்மண்கிட்டன்கடை செட்டிதாழ்வு" பர. நில. இலா. 30-ம், குளி 4-ம். இவ்வாதனம் சேர்வையர் எ. லாசறஸ் என்பவரால் 1952-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 23-ம் திகதி அளந்தகொண்ட 362A, நம்பர் படத்தின்படி லொட் நம். 5 என்று சுட்டப்பட்ட ஆதனம். பர. நில. இலா (6) ஆறும், பனைகளும். எல்லை: கிழக்கு— K. கந்தசாமிக்கும், நாகரெத்தினம் பெண் இராசம்மாவுக்கும், தம்பையா கைம்பெண் மாரிமுத்துவுக்கும் உரிய ஆதனம். வடக்கு—மேலே சொல்லிய சேர்வையர் படத்தில் லொட் 4 என்று சுட்டப்பட்ட ஆதனம் இவ்வாதனம் வல்லிபுரம் நல்லதம்பிக்கு விற்கப்பட்டது. மேற்கு — இக்காணிக்கும், மறுதுண்டுக் காணிகளுக்கும், றோட்டுக்கும், றெயில்வேலைனுக்கும் போக்குவரத்துக்குவிடப்பட்ட 10அடி அகலமான வழிப்பாதை. தெற்கு —கந்தையா கந்தசாமிக்கும், ஆறுமுகம் கந்தையாவுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும். இக்காணியில் மேற்குப்பக்குப்பக்கமாக விடப்பட்ட பாதையில் றோட்டுக்குப் போக்குவரவு செய்யப் பாவிப்புரித்தும்.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
16A, அம்மன்றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபசுகாலப் பாவசங்கீர்த்தனத்தைப் பின்போடுதல் புத்தியல்ல

(இச்சிறுகதை ஆங்கிலத்தில் "Easter Confession" என்ற பெயருடன் திரு. எஸ். எம். ஜே. ஞாயிஸ் அவர்கள் எழுதிய கதையிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.)

சூசைமுத்துவின் மூத்தமகன் இறந்து மூன்று வருடங்களாயின. அதுமுதல், அவன் பாவசங்கீர்த்தனம் செய்யவில்லை. 'கண்கெட்ட' தெய்வத்துடன் கோபம். இது ஒரு நியாயம். அன்றுமுதல் மதுபானத்தை முன்னிலும்கூட அருந்திவந்தது மறுநியாயம். பாவசங்கீர்த்தனம், சற்பிரசாதம் இல்லாதிருந்தாலும் இடைக்கிடை கோவிலுக்குப்போய் மெழுகுதிரி கொழுத்திவருவான். அவ்வளவுந்தான் அவனுடைய வேதஅனுசாரம்.

மூன்று வருடங்களாயின. நத்தார்த் திருநாள்வந்துவிட்டது. எல்லாஉத்தம கத்தோலிக்கரும் பாவசங்கீர்த்தனம்செய்து திருநாளுக்கு ஆயத்தம் செய்துவந்தார்கள். சூசைமுத்து வீட்டுக்காரரும் அப்படியே. அத்துடன் பலகாரஞ்சுடுதலும் அமளிதுமளியாய்த் தொடங்கிவிட்டது. சூசைமுத்து சந்தோஷமாய் இருக்குந்தருணம்பார்த்து அவன் மனைவி மரியம்மா பாவசங்கீர்த்தனம் செய்துவரும்படி சொல்லுவாள். சிலதருணங்களில் அவன் அவள்மேல் பாம்புபோற் சீறுவான். என்றாலும் மரியம்மா பாவசங்கீர்த்தனத்தைப்பற்றி நினைப்பூட்டிக் கொண்டே வந்தாள். மரியம்மாவுக்கு 'மாட்டேன்' என்று சொல்லமுடியாதவனாய், "பின்பு பார்ப்போம், இப்போது என்ன அவதி, நான் இப்போது செத்துப்போவேன் என்றபயம் வேண்டாம், 'தபசுகாலத்தில் கட்டாயமாய்ப் பாவசங்கீர்த்தனம் செய்வேன்,' என்று பின்போட்டுவிட்டான்.

தபசுகாலத்தின் 5-ம்ஞாயிற்றுக்கிழமையுமாய்விட்டது. ஆரும்வெள்ளிக்கிழமைக்கு திருக்கல்லறை சந்திக்கச் செல்லும்போது இளவாலையில் சூசைமுத்துவைப் பாவசங்கீர்த்தனம் பண்ணவைக்கவேண்டுமென்ற எண்ணம் மரியம்மாவுக்கு இருந்தது. ஆனால், அதிகாலையில் அங்குசென்றதும் சூசைமுத்து இரண்டுமெழுகுதிரிகளைக் கொழுத்திவிட்டுப் பனைக்கூடற்பக்கம் போய்விட்டான். பின்பு இரவு 7மணிபோல தள்ளாடித் தள்ளாடி வீடுதிரும்பினான். அன்று மரியம்மா மிகவும் துக்கப்பட்டாள். என்றாலும், பெரியவியாழன் அல்லது உயிர்த்தஞாயிறு தினங்களிலாகுதல் திவ்வியசற்பிரசாதம் சூசைமுத்து பெறப்பண்ண வேண்டுமென்று ஆசைகொண்டிருந்தாள்.

பெரியவியாழக்கிழமைக்கு முந்திய நாள் வீட்டில் பெரும் வாக்குவாதமாய் இருந்தது. கலியாணஞ்செய்யுமுன் தான் உயிர்த்த ஞாயிற்றுக்கிழமைகளிலேதான் சற்பிரசாதம் எடுத்துவந்ததாகவும் அதுபோல இம்முறை எடுப்பதற்கு பெரியசனிக்கிழமை பாவசங்கீர்த்தனத்துக்குப் போவதொழிய அதற்குமுதல் முடியாதென்றும் உரப்பிவிட்டான் சூசைமுத்து. மரியம்மாவும் முற்றாய்ப் பாவசங்கீர்த்தனம் செய்யாது இருப்பதிலும் பெரியசனிக்கிழமையாகுதல் செய்வது விரும்பத்தக்கது என்றுஎண்ணி அன்றுபேசாது விட்டுவிட்டாள். அதன்பின் அவனுடன் அன்பாகப்பேசி, தன்னுடன் கோபித்துக்கொண்டு அவன் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகாது விட்டுவிட இடங்கொடாது நடந்துவந்தாள். இடைக்கிடையே பாவசங்கீர்த்தனத்தைப்பற்றி நினைப்பூட்டி தற்செயலாக மரணமேற்பட்டால் அவன் கதிஎன்னவாகுமெனவும் கேட்டுவந்தாள். "பயப்படாதே மரியம்மா, நான் கெதியிற் சாகப்போவதில்லை. நீ நஞ்சைப்போட்டுச்சாகக் கொன்றாலொழிய நான் இன்னும் இருபத்தைந்து வருடத்துக்குச் சாகமாட்டேன்," என்று சிரித்துக் கொண்டு சூசைமுத்து பதிலளித்தான்.

பெரியவியாழன், பெரியவெள்ளி வந்துமுடிந்தது. சூசைமுத்து கல்லறைச் சுருபத்துக்கு பெரியவெள்ளிக்கிழமை இரண்டுமெழுகுதிரி கொழுத்தப்போனதொழிய வேறு அவன் கோவிற்பக்கம் போனதேயில்லை. பெரியசனிக்கிழமை மத்தியானம் மரியம்மா தன்புருஷனுக்கு விருப்பமான சமையல்கள் எல்லாம் சமைத்து வைத்தாள். நிரம்பஉண்டதன்பின் உறங்கிவிட்டான். காலுமணியானதும் மரியம்மா அவனை எழுப்பி பாவசங்கீர்த்தனத்தைப்பற்றியும் அவனுடைய வாக்குறுதியைப்பற்றியும் மெல்லென நினைப்பூட்டினாள். அரைமனத்துடன் எழும்பி உடுத்திக்கொண்டு கோவிற்பக்கம் ஒருவகைவேண்டா வெறுப்புடன் சென்றான்.

கோவிலில் பெருந்திரளான சனக்கூட்டம். ஆண்பிள்ளைகள்தான் பாவசங்கீர்த்தனத்தட்டியைச் சூழவர இருந்தனர். சூசைமுத்து கோவிலின் ஒருமூலையில்போய் உட்கார்ந்தான். பாவசங்கீர்த்தனம்செய்ய ஆயத்தஞ்செய்ய வேண்டுமல்லவா? ஆனால், அவனுக்குமனம் ஏவவில்லை. சனக்கூட்டத்தைப் பார்த்ததும் "இது இப்போது முடியாதகாரியம். இருட்டுப்பட்டதன்பின்பும் இன்றைக்குச்சுவாமி இருப்பார்தானே. பின்பு பார்த்துக் கொள்ளலாம்" என்று தனக்குள் நினைத்துக்கொண்டு கோவிலுக்கு வெளியே சென்றான். மரியம்மா தன் புருஷன் கோவிலுக்குச் சென்றதைப் பற்றிக் கேள்விப்பட்டுச் சந்தோஷமடைந்தாள். ஆனால், கோவிலில் இருந்து வெளியேறிய சூசைமுத்து நேரே தான் வழக்கமாகச் செல்லுகிற கள்ளுக்காரனிடமே போனான். அடுத்தநாள் உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை என்ற உசாரிலே போத்தல் ஒன்றோ இரண்டோ கூடப்போட்டுக் கொண்டான். நல்லஇருட்டாயும் விட்டது. வீட்டுக்குப்போய்ச் சாப்பிட்டுவிட்டுப் பின்பு கோவிற்பக்கம்போய்ப் பார்ப்போம் என்பதுதான் அவன் எண்ணம். தனிமையானவழி. எதிர்ப்பக்கமாக ஒரு மோட்டோர்காரின் வெளிச்சம் தோன்றிற்று. நடுத்தெருவில் தள்ளாடித்தள்ளாடிவந்த சூசைமுத்து அலைசந்தசைந்து தெருவின்பக்கத்துக்குச் சென்றான். மோட்டோரும் அவனைத் தாண்டிவிட்டது. தெருக்கரையில் புற்கள் நல்லாய் வளர்ந்திருந்தன. சூசைமுத்து மோட்டோர் காருக்கு விலத்த அப்புற்களுள் கால் வைத்ததும் ஏதோ கொழுகொழென அவன் காலைச்சுற்றிக்கொண்டது. காலைஉதறினான். அவன் இருந்த நிலைமையில் உரமாய் உதறவும் முடியவில்லை. கொழுகொழுத்த அந்தப்பண்டம் அவன் காலில்இருந்து விலகுமுன் மேற்காலில் ஊசியாற்குத்தினதுபோல் ஒருநோவை உணர்ந்தான். அவ்வளவுந்தான். அவ்விடத்துக்குக்கிட்ட இருந்த ஒரு மதவில் உட்கார்ந்துவிட்டான்.

அன்று இரவு அவனைத்தேடிவந்தவர்கள் அவன்உடம்பு, மதவுக்குப்பக்கத்தில் கிடப்பதைக்கண்டு பதைத்தனர். மரியம்மா ஆறுத்துயரமடைந்தாள்.

சேபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
11-ம் பத்திநாதப்பாப்பரசர்.

## சிந்தனைக் கதிர் — 11

அமெரிக்காவின் மேற்குப்புறமாகவுள்ள மாகாணமொன்றில் காணமற்போன சிறுமியொருத்தியைப்பற்றிய செய்திகளைத் தினசரிகளனைத்தும் பிரசுரித்தன ஒருதினம். வானொலிபொருத்திய பொலிஸ்வாகனங்கள் பரபரப்புடன் அங்குமிங்கும் ஓடின. நகரகாவலர்கள், துப்பறியும் நிபுணர்கள், தொண்டர்படையினர், சாரணஇயக்கத்தினர், சிறுமியின் உறவினர், அயலவர்கள், நண்பர்களாக அறுநூறுக்குமதிகமானோர் அக்கிராமம் முழுவதிலும், பக்கத்திலுள்ள அடர்ந்தவனத்திலும் தேடுவதில் ஈடுபட்டனர். பொலிஸ், இராணுவ தலைமைக் காரியாலயங்களிலிருந்து நிமிடத்துக்கு நிமிடம் பலவித உத்தரவுகள் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

மூன்றுதினங்கள் கழிந்தன. சிறுமியைப்பற்றிய தகவலெதுவுமே கிடைக்கவில்லை. நம்பிக்கையை இழந்துவிட்டனர் பெற்றோர். அவ்வடவியின் பக்கத்தில்வசித்த மனிதனொருவன் அச்சிறுமியின் பெற்றோருக்குத் தன்னாலியன்ற உதவியைச்செய்ய எண்ணினான். எனவே, தனிப்பட்ட முறையில் அக்காட்டினுள் தேடுதலை ஆரம்பித்தான். இருமணித்தியாலங்கள் கழிந்தன. பசியாலும், பயத்தாலும்மயங்கிச் சோர்ந்த நிலையிலிருந்த சிறுமியைத் தன்கரங்களிலேந்தியவனாய் வனத்திலிருந்து வெளியேறினான் அம்மனிதன். சிலநிமிடங்கள் முதலுதவி யளிக்கப்பட்டபின் அக்குழந்தை முன்போலானாள்.

கிறிஸ்து தொடங்கிய இரட்சணியப்பணியில் இன்று ஏராளமானோர் ஈடுபட்டுள்ளனர். பாப்புஎன்ற தலைமையில் பல்வேறு துறவறசபைகளும், கன்னியர்அணிகளும், மரியாயின் சேனைபோன்ற இல்லறஅப்போஸ்தலர்களும் தொண்டாற்றிவருவதால் அவ்வலுவலில் தமக்குப் பங்கில்லையென எண்ணுகின்றனர் பலகத்தோலிக்கர்கள். எங்களால் தனிப்பட என்னசெய்ய இயலும்என்று இவர்கள் குரல்எழுப்புகின்றனர்.

இவர்கள் மேற்காட்டிய நிகழ்ச்சியைச் சிறிது சிந்தித்தல் நன்று. தாவீது என்றசிறுவன் கடவுளின் நம்பிக்கையுடன் கோலியாத்தை எதிர்த்து வெற்றிபெறவில்லையா? குருக்கள், கன்னியர், இல்லறத் தொண்டரால் நிறைவேற்றமுடியாத பலபணிகளைத் தனிப்பட்டமுறையில் பலகத்தோலிக்கர்கள் சிறுபிரயாசையுடன் நடாத்தியுள்ளனர் என்பதற்கு வரலாறு சாட்சிசொல்லும். எனவே, எம்மாலிலகுவில் செயலாற்றக் கூடியதென்ன என்பதைச்சிறிது சிந்திப்போம். பின்னர் இறைவனில் பூரணநம்பிக்கையுடன் அவற்றைச் செயலாற்றுவோம்.

சா. பெ.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2483

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

கொழும்புத்துறை
சின்னர் முருகேசு
— வழக்காளி.

எதிராக, கொழும்புத்துறை
1. ஆசீர்வாதம் தயிரியநாதர்
2. ஷெயூர் பெண் அந்தோனியா
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 2483-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகளை 1962-ம்ஆண்டு வைகாசிமீ 5-ந்உ சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1421-33சதம். ரூபா1000-க்கு8-10-1958 தொடக்கம், 11-12-58வரை 12வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும், கோட்டுச்செலவு ரூபா 195-43சதமும்.

### காணிகளின் விபரம்


1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, கொழும்புத்துறை இறை "பயற்றம்புலம்" பர. நில. இலா. ஒன்பதும், குளி ஏழு. (பர. நில. இலா. 9, குளி 7). வான்பயிர், செய்பயிர்களும். இந்தப் பர. நில. இலா. ஒன்பது, குளி ஏழுக்கும் எல்லை: கிழக்கு — அந்தோபர்னாந்துவிற்குரியவாதனம். வடக்கு— ஆறுமுகம் நடராசாவிற்குரிய வாதனம். மேற்கும், தெற்கும்—ஒழுங்கை. இதடங்கலிற் சொரியலாய் $\frac{1}{3}$ பாகமும் அதற்குரியவைகளும். இதன்பதிவு D. 195/11

இக்காணிக்குப்பதிலாய் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு வழக்குஇல. P.412-ல் கீழ்க்காணும் இரண்டாம் துண்டுக்காணி எதிராளிகட்குரியதாய்த் தீர்ப்பளிக்கப்பட்டது.

2. வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திறிச் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, கொழும்புத்துறை இறை "பயற்றம்புலம்" பர.நில.இலா.9, குளி 7. ஆனால், உத்தரவுபெற்ற உலாந்தா C. இராசகாரியரால் எழுதப்பட்ட இல. 282 A. திகதி 24-11-1961 கொண்ட அளவுப்படத்தின்படி பர. நில. இலா. எட்டு, குளி ஒன்பது. (பர. நில. இலா. 8, குளி 9). இதில் அவ்வளவுப்படத்தில் இரண்டாம் துண்டாகக் காட்டப்பட்ட காணி பர. நில. இலா. இரண்டு, குளி பதினைந்து (பர. நில. இலா. 2, குளி 15)-ம், அதற்குரியவைகளும், பயிர்வகைகளும், மண்குடிசையும். எல்லை: கிழக்கு— அந்தோ பர்னாந்துவும், மறுபேர்களும். வடக்கு — அப்பர் சுப்பிரமணியமும், பெண் தங்கமும். மேற்கு — எஸ். எம். மோகுட் பெண் சரஸ்வதி அல்லது யோகேஸ்வரி. தெற்கு—ஒழுங்கை.

வை. ஏரம்பமூர்த்தி,
காரைநகர் கொம்மிஷனர்.

1962-ம்ஆண்டு சித்திரைமீ 2-ந்திகதி



## 1-ம் வருட நல்மரண ஞாபகம்

உதயம்: 1907 — மறைவு: 1961

கடந்த 1961-ம்ஆண்டு சித்திரைமாதம் 13-ந்திகதியன்று காத்திராப்பிரகாரம் எங்களைப் பரதவிக்கவிட்டுப் பரமபதமடைந்த திரு. மரியாம்பிள்ளை டேவிற்அவர்களின் முதல்வருட நினைவுதினம் 13-4-62. அன்றுகாலை புங்குடுதீவு, அர்ச்.பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் இவரின் ஆன்மசாந்திக்காக ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இதனைக் கண்ணுறும் சத்தியசமய பக்தர்கள் அனைவரும் இவரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக ஆண்டவரை வேண்டுமாறு கேட்கின்றோம்.

ஆண்டவரே நித்தியஇளைப்பாற்றியை இவருக்களித்தருளும்.

இவரை இழந்துதவிக்கும்
மனைவியும், மக்கள் ஐவரும்.

புங்குடுதீவு,
10-ம் வட்டாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தொண்டு இதழ்

மொழிபெயர்ப்பு விமர்சனக் கட்டுரை — இல 2.

## அரசகரும மொழி அலுவலக வெளியீட்டுக்கிளை தரும்

### கலைச் சொற்கள்

[வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், B. A.]

முன்னர் எழுதிய கட்டுரையில் திசை மொழிப்பெயர்களைத் தமிழில் எழுதுதலில் அரசகரும மொழித்திணைக்களம் எவ்வாறு தவறான வழியில் செல்லுகின்றது என்பதை ஒருசில எடுத்துக் காட்டுகள்மூலம் ஆராய்ந்தோம். அதே நூலில் ஆளப்பட்டுள்ள ஒருசில கலைச் சொற்களும், ஏன் இயற்சொற்களுங்கூட எத்துணை பொருத்தமற்றவை என்பதை இங்குக் காட்டுவோம்.

கலைச்சொல்லாக்கம் அத்துணை எளிதல்ல. மொழிநூல் தேர்ச்சியுள்ள பெரும்புலவர்களே இதனைச் செய்தல் சாலும். Pig iron என்பதைப் பன்றி இரும்பு என்றும், Trunk call என்பதை முண்டஅழைப்பு என்றும் ஆக்குபவர்கள், இப்பணியைச் செய்யச் சிறிதும் தகுதியற்றவர்கள் என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. வட்டுக்கோட்டைக்குப் போகும்வழி கேட்டவனுக்குத் "துட்டுக்கு எட்டுக்கொட்டைப் பாக்கு" என்றானும் ஒருவன். இதனையொப்பவே அரசகருமமொழித் திணைக்களத்தின் தமிழ்க் கலைச்சொல்லாக்கப் பணி இருக்கிறது.

Text book-நியம நூல்என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இதனைப் புரிந்துகொள்ள முடியுமா? பழகு தமிழில் வழங்கப்பட்டுவரும் பாடநூல் என்ற சொல்லிலுள்ள பிழைதான் என்ன? Constitutional-யாப்புமுறை எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை யாப்பு என்ற சொல் செய்யுள் கட்டுதல் என்ற பொருளில் அமைந்துள்ளது. ஒரு சொல்லை ஒரு பொருளில்தான் வழங்க வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை. ஆனால், ஆக்கப்படுஞ் சொல் மூலச்சொல்லுக்கு இணையானதாக இருந்தால் மாத்திரம் போதுமா? அது எளிதாக விளங்கக் கூடியதாகவும், வளைந்து கொடுக்கக் கூடியதாகவும் இருத்தலும் வேண்டும். Constitute என்ற சொல் அமை, கட்டு யா என்ற வினைப்பொருட்களைத் தருகின்றது. எனவே, இவற்றின் அடியாகக் கட்டுதல், அமைப்பு அமைத்தல், யாப்பு, யாக்கை முதலாம் பல பெயர்ச் சொற்கள் பிறக்கின்றன. இதுவரை Constitution என்ற சொல்லைத் தமிழில் அமைப்புஎன எழுதி வந்தார்கள். அச்சொல் யாப்பிலும் தாழ்ந்ததல்ல. இவ்வமைப்பு அரசியலோடு தொடர்புறுவதால் அரசியலமைப்பு என்பதுதெளிவும் பொருத்தமும் உடையது. எனவே, Constitutional என்ற சொல்லை அரசியலமைப்பு வழியான எனலாம். Constitutional monarchy என்ற சொல்லை யாப்புமுறை முடியரசு என்பதிலும், அரசியலமைப்பு வழி முடியரசு என்று மொழிபெயர்த்தால் தெளிவு உண்டாகாதா? யாப்புமுறை என்ற சொல்லின் ஆங்கில இணைச் சொல்லை யாரறிவர்? பேராசிரியர் ஒருவரிடம் இதனைக் கேட்டகாலை அவர் தந்த சொற்களில் Constitution என்ற சொல் இருக்கவில்லை. Unitarians ஒருமையினர் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது மொழிபெயர்ப்பா? முழிபெயர்ப்பா அறிகிலோம். யார் இதை விளங்கவல்லவர்? கிறித்தவர்களில் ஒருசாரார், பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளும் இறைவனின் திரித்துவக் கொள்கையை மறுத்து அவர் ஒரே ஆள் என்று வாதிட்டார்கள்; அவர்களையே Unitarians என்கின்றோம். எனவே, அச்சொல்லை ஓராள்மை இறைவாதிகள் என்றால் கருத்து நனி விளங்குமன்றோ. Bishops என்ற சொல்லை விசுப்புமார் எனவும், Archbishops என்ற சொல்லை மேற்றிராணிமார்கள் எனவும் மொழிபெயர்த்துள்ளார்கள். இது மொழிபெயர்ப்பாளரின் பொது அறிவுக்குறைவை உள்ளங்கை நெல்லிக்கனி எனக் காட்டுகின்றது. மேற்படி சொற்களுக்கு முறையே மேற்றிராணிமார்கள், அதிமேற்றிராணிமார்கள் என்றசொற்கள் வழக்கத்திலுள்ளன. இதனை அறியாதவர்கள் வரலாற்றுத் துறையிலுள்ள நுணுக்கங்களை எப்படி அறிதல் கூடும்? Oath of allegiance—கீழ்ப்படிவு ஆணைஎன மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Allegiance கீழ்ப்படிவை மாத்திரம் சுட்டவில்லை. இதன் வேர்ச்சொல்லை ஆராயின், அது தலைமை ஏற்றல் என்னும் பொருளைத் தருகின்றது. அரசனிடம் காட்டவேண்டிய இராசவிசுவாசம் இதில் அடங்கியுள்ளது. ஆணை என்றசொல் கட்டளையைக் குறிக்கவும் வழங்கப்படுகிறது. எனவே, கீழ்ப்படிவு ஆணை என்ற சொல் உரிய பொருளை விளக்காது, மாறுபட்ட பொருளையும் தரக்கூடியது. ஆகவே, இச்சொல்லைத் தலைமை ஏற்பு வாக்குறுதி என்றோ, இராச விசுவாச வாக்குறுதி என்றோ மொழிபெயர்த்திருக்கலாம்.

இவ்வாறு Factor-காரணி, Elector தேர்வோன், Act-விதி, Non-conformists இணங்காதோர், முதலாம் பல சொற்கள் மாறுகொளக்கூறல் என்னும் குற்றத்துக்கு இலக்காகின்றன.

இயற்சொற்கள் பலவும் இவ்வாறு மொழிபெயர்ப்பில் சிதைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் சிலசொற்களை விளக்குவோம். Suggestions-தெரிப்புரை, என அரசகரும மொழி அலுவலகத்தார் மொழிபெயர்க்கிறார்கள். Suggest என்பது குறிப்பாக, மறைமுகமாகக்கூறு என்ற பொருளைத் தருகின்றது. எனவே, இச்சொல்லை மொழிபெயர்க்கும்போது வாக்கியத் தொடர்பில் ஏற்றவகையில் கருத்துச் சிதையாமல் மொழிபெயர்க்கலாம்; "திருவாளர் மடுத்தீன் தெரிப்புரைகூறி உதவினார்கள்" என்ற வாக்கியத்தைத் திரு......கல் ஆலோசனைகள் தந்து உதவினார்கள் என்று எழுதலாமே.

Freedom of the Press அச்சகச் சுதந்திரம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Press என்ற சொல் ஆகுபெயர்போல்நின்று பத்திரிகைகள், வெளியீடுகள் முதலியவைகளைக் குறிப்பதன்றி வெறுமனே அச்சகத்தைக் கருதவில்லை. அச்சகம் என்ற தமிழ்ச்சொல் ஆகுபெயராய் வெளியீடுகள் முதலியவற்றைச் சுட்டவில்லை. ஆகவே, வெளியீட்டுச் சுதந்திரம் என்பதுதான் பொருத்தமானது. Clause என்ற சொல்லை நிபந்தனை என்கிறார்கள். சட்டவிதிகளின் உட்பிரிவுகள் பெறும் பெயர்களில் இதுவுமொன்று. இச்சொல்லைக் கிளவியம் என ஓர் அறிஞர் மொழிபெயர்த்துள்ளார். நிபந்தனையிலும் கிளவியம் புதுமையான[illegible]கின்றது.

மேற்படி நூலில் முதற் சில பக்கங்களிலேயே இப்படியாகப் பல கலைச் சொற்களும், இயற்சொற்களும் தாறுமாறாய் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இ[illegible]யில், இலக்கண வழு, [illegible]முதலியவற்றை ஆராய்வோம்.

---

## தேம்பாவணி — நாட்டுப்படலம் விளக்கவுரை

### மருதநிலக் காட்சிகள்

—: வித்துவான் ச. சி. ஞானப்பிரகாசம் :—

14. பூரியார்திருப் போலதலை பசியகூழ் நிறுவி
நேரி னார்தலை நேரநேர் வளைவொடு பழுத்த
ஆர மானநெல் அறுத்தரி கொண்டுபோய் அங்கண்
போரி தாம்எனக் களித்தனர் போர்பல புனைவார்.

(இள்) பசுமையான செந்நெற்பயிர்கள் செல்வச்செருக்குள்ள கீழ்மக்களின் தலைபோலத் தலைநிமிர்ந்து நிற்கும். முற்றிப் பழுத்தபின்னர் பெரியோரின் தாழ்மைநிறைந்த தலையைப்போல வளைந்துகிடக்கும். அவற்றை மள்ளர் அறுத்து, அரியாகக் கட்டிக்கொண்டுபோய், அந்த யூதேயாநாட்டில் வேறு போரின்றி இதுவே போராதும்என்று சொல்லும்படி, மகிழ்வுடன் பல நெற்போர்களாகச் சேர்த்துக் கட்டுவர் (எறு).

உவமை அணி. செல்வச்செருக்குள்ள கீழ்மக்களின் தலை உவமானம். பசுமையான நெற்பயிர்கள் உவமேயம். நிமிர்ந்துநிற்றல் பொதுத்தன்மை. மேன்மக்களின் தாழ்மைநிறைந்த தலை உவமானம். காய்த்துப்பழுத்த நெற்கதிர் உவமேயம். தலைவணங்குதல் பொதுத்தன்மை.

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தின்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரினிறைஞ்சிக் காய்த்தவே" — சிவக 53

"கால்தோய் கணைக்கதிர் கால்தோய் சாலி" —பெருங் 1, 48, 159 என்றார் பிறரும்.

15. மெய்க லந்தபொய் விலக்கிமெய் கோள்பவர் வினைபோல்
வைக லந்தநெல் பகட்டினால் தெழித்துவை மறுத்துக்
கைக லந்தடுத் தேற்குநர்க் களித்தபின் களித்துத்
துய்க லந்தநெல் உண்கவும் ஈகவுந் தொகுப்பார்.

(இள்) மெய்யோடுகலந்த பொய்யைநீக்கி, மெய்யைமாத்திரங் கொள்ளுகின்ற பெரியோரது செய்கையைப்போல, வைக்கோலுடன்சேர்ந்த நென்மணிகளைக் கடாக்களினால் மிதிப்பித்து, வைக்கோலைநீக்கிச் சுத்தமான நென்மணிகளை இரவலர்க்குஈந்து, பின் தாங்கள் உண்பதற்காகவும், மேலும்வந்து இரப்போர்க்கு ஈவதற்காகவும் தானியக்களஞ்சியங்களில் சேர்த்துவைப்பார்கள் (எறு).

மெய் நெல்மணிகளுக்கும், பொய் வைக்கோலுக்கும், மெய்கொள் பெரியோர் மள்ளருக்கும் உவமை.

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" — திருக்குறள் 423
"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" — திருக்குறள் 322:

என்று திருவள்ளுவர் கூறுவது காண்க.

"ஈடுசால் போர்பழித் தெருமைப் போத்தினால்
மாடுறத் தெளித்துவை களைந்து காலுறீஇச்
சேடுறக் கூப்பிய செந்நெற் குப்பைகள்
கோடுயர் கொழும்பொனின் குன்ற மொத்தவே" — சிவக 59

எனச் சீவகசிந்தாமணியுள்ளும்,

எறிதரு மரியின்சும்மை யெடுத்துவா னிட்டபோர்கள்
குறிகொளும் போத்திற் கொள்வார் கொன்றநெற் குவைகள் செய்வார்
வறியவர்க் குதவிமிக்க விருந்துண மனையி னுய்ப்பான்
நெறிகளும் புதையப்பண்டி நிறைந்துமண் ணெளிய ஆர்வார்
— கம்பரா, நாட், 20.

எனக் கம்பராமாயணத்துள்ளும் வருவனகண்டு இன்புறுக.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3824

தெல்லிப்பளை மேற்கு
1. தவசர் சின்னத்தம்பியும்
2. பெண் சின்னத்தங்கமும்
— வழக்காளிகள்.

எதிராக

தெல்லிப்பளை மேற்கு
1. மாதன் பூதன்
2. பெண் தெய்வி
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 3824-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆண்டு வைகாசிமீ 10-ம்உ வியாழக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 476-ம், 12-1-61 தொடக்கம், 31-1-61 வரைக்கும் ரூபா 300-க்கு 8வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும், கோட்டுச்செலவும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை தெல்லிப்பளை மேற்கு, "வின்னாலைப்பிட்டி, வரண்ட வெளியன்காடு" நிலப்பரப்பு 7, குளி 9. வடலிகள். எல்லை: கிழக்கு — நாகர் இளையதம்பிக்கும் பெண் விசாலாட்சிக்குமுரியவாதனம். வடக்கு—வைத்தியநாதர் பெண் செல்வநாயகிப்பிள்ளைக்கும், கந்தர் நாகமுத்துவுக்குமுரிய வாதனங்கள். மேற்கு—வயிரவநாதன் இளையதம்பிக்குரியவாதனம். தெற்கு — தம்பிப்பிள்ளை சின்னத்தம்பிக்குரிய வாதனம். இதடங்கலும் பதிவிலக்கம் H. 258/239.

ஆ. ச. இராசேந்திரம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாச வேளை

நமது நிருபர் அமலன்

# பாப்பரசரின் உதவியாளர்கள்

● முக்கிய கர்தினல்கள் ● சுதந்திர வேட்கை ● டைம் சஞ்சிகை ● கிளேயர் பூத் லூஸ்

பெரியண்ணா: அம்மா இந்தச் சஞ்சிகையைப் பார்த்தீர்களா? சத்திய திருச்சபையின் முக்கிய கர்தினல்மாரின் நிழற்படங்களில் பலவற்றைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள்:

அம்மா: அழகான படங்கள். நல்லமாதிரியாக வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக்கத்தோலிக்க பத்திரிகையின் பெயர் என்ன?

பெரியண்ணா: இப்படித்தான் இம்முறை பலரும எண்ணியிருப்பார்கள். அமெரிக்காவிலிருந்து வெளியாகும் டைம் (Time) என்ற செய்திச் சஞ்சிகை இது.

அகஸ்ரின்: டைம் சஞ்சிகை உலகத்திலேயே மிகப்பெரிய அதிக விநியோகமுள்ள வார இதழ். ஒவ்வொருதடவையும் 33லட்சம் பிரதிகள் வெளியாகின்றன. இதில் செய்திகளைத்தவிர வேறு அம்சங்களைக் காணக்கிடையாது. ஆயின் செய்திகளை அவர்கள் சுவையான கட்டுரையாகவே அளிப்பர்.

அப்பா: டைம்சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கென்றி லூஸ் மிகப்பெரிய பத்திராசிரியராக எண்ணப்படுகிறார். அவரது துணைவியார் கிளேயர் பூத் லூஸ் உத்தம கத்தோலிக்க நங்கை. அமெரிக்க தூதுவராக வெளிநாடுகளில் சிறப்பாகப் பணியாற்றியவர்.

நிர்மலா: இப்போது எதற்காக கர்தினல்மாரின் படங்களைப் பிரசுரித்திருக்கிறார்கள்?

பெரியண்ணா: ஏதாவது ஒரு முக்கிய நிகழ்ச்சி நடைபெறும்போது அந்த நிகழ்ச்சியுடன் சம்பந்தப்பட்ட முக்கிய வரலாறுகள் அனைத்தையும் ஆராய்ந்து தொகுத்து வெளியிடுவது டைம்சஞ்சிகையின் கொள்கையாகும். அண்மையில் பாப்பரசர் சில கர்தினல்மாரைப் புதிதாக நியமித்தார் அல்லவா. எனவே திருச்சபையின் இளவரசர்கள் என அழைக்கப்படும் கர்தினல்மார் பற்றிய சம்பவங்கள் அனைத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

அம்மா: கர்தினல்மார் பற்றி சில மாதங்கட்குமுன்னர் சம்பாஷித்தது எனக்கு இன்னமும் நினைவிலிருக்கிறது.

அப்பா: ஒரு அரசாங்கத்தில் முக்கிய இலாகாக்களை நிர்வகிப்பதற்கு இராச்சியத்தின் தலைவனுக்கு உதவியாக அமைச்சர்களை நியமிப்பதுபோல சத்தியதிருச்சபையிலும் பாப்பரசருக்குதவியாக திருச்சபையின் பிரதான நிர்வாக அலுவல்களைக் கவனிப்பதற்குப் பல கர்தினல்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அன்ரன்: அப்படி நியமிக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவரைப்பற்றி எனக்குத் தெரியும். அவர்தான் விசுவாசப்பரப்புதற்சங்கத்தின் தலைவரான கர்தினல் ஆகாஜியானியன் ஆண்டவர். இவர் ஆர்மீனிய சாதியினர்.

அகஸ்ரின்: வேதப்பரப்புதல் நாடுகள் என அழைக்கப்படும் ஆசிய ஆபிரிக்க; லத்தீனிய அமெரிக்க.நாடுகளிலுள்ள கத்தோலிக்கர்களின் மேற்பார்வையாளர் என்றும் இவரைக்குறிப்பிடலாம். ஆண்டவரவர்கள் சிலிசியாவின் பிதாப்பிதா என்ற கௌரவத்தையும் தாங்குகிறார்கள்.

நிர்மலா: நானும் ஒருகர்தினலைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர்தான் பாப்பரசரின் பிரதம மந்திரியார் என்றழைக்கப்படும் கர்தினல் சிக்கோகியானிஆண்டவர். வத்திக்கானின் இராச்சியமந்திரிஎனவும் அழைக்கிறார்கள்.

பெரியண்ணா: இவர் பல வருடங்களாகப் பிறநாடுகளில் பாப்பரசரின்பிரதிநிதியாகவிருந்து அனுபவம் பெற்றவர். பன்னிரண்டாம் பத்திநாதர் பாப்புவாகவிருந்தபோது இப்பதவியையும் தாமே வகித்துவந்தார். காரணம் அதற்கு முன்னர் பதினொராம் பாப்புவின்கீழ் பலவருடங்களாக இராச்சியபாரமந்திரியாகக் கடமையாற்றி நல்லஅனுபவம் பெற்றதனாலேயே.

அப்பா: கர்தினல்மார் திருச்சங்கத்தின் தலைவராகவிருக்கும் கர்தினல் திசெறன்ற் ஆண்டவரை மறந்துவிட்டீர்களே. பாப்பரசர் இறந்தபின் அடுத்த பாப்புவின் தேர்தலை நிர்வகிப்பது இந்தப்பதவிலுள்ளவர்தானே

அகஸ்ரின்: எழுபத்தெட்டுவயதுள்ள இவர் பிரான்சியர். முன்பு வத்திக்கானிலுள்ள கலைக்கூடத்தின் பொறுப்பாளராகப் பதவிவகித்தவர்.

பெரியண்ணா: மேற்றிராணிமாரை நியமிப்பதிலும், உலகமடங்கிலுமுள்ள மேற்றிராசனங்களை நிர்வகிப்பது சம்பந்தமாகவும் பாப்புவுக்கு ஆலோசனையளிப்பவர் கர்தினல் கன்போலநெரிஆண்டவர். திருச்சபையின் உள்நாட்டுமந்திரிஎன இவரை அழைக்கலாம். வத்திக்கானில் பதவிகள் பலவற்றை 35வருடங்களாக வகித்து நல்ல அனுபவம்பெற்றவர் இவர்.

அகஸ்ரின்: பரிசுத்த உரிமைகள் சங்கத்தின் தலைவர் கர்தினல் ஒட்டாவியானி ஆண்டவர். திருச்சபையின் பரிசுத்தபோதனைகள், ஆகமங்கள் முதலியவற்றைப் பாதுகாப்பவர். திருச்சபையிலிருந்து எவரையாவது நீக்குதல், தேவதிரவிய அனுமானங்கள் சம்பந்தமான இறுதித்தீர்ப்பு போன்ற பாரதூரமான அதிகாரங்கள் இவர்வசம் உண்டு.

கார்மெலா: முன்பெல்லாம் இத்தாலியர்கள்தானே அதிகமாக கர்தினல் சபையில் அங்கம் வகித்தனர்?

நிர்மலா: ஆமாம். ஆயின் பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர், இப்போது பாப்புவாகவுள்ள 23-ம்அருளப்ப பாப்பரசர் இருவரும் இந்தக் குறையை தங்கள் புரட்சிகரமான நியமிப்புகளால் மாற்றிவிட்டார்கள்.

அப்பா: இப்போது பொதுவாக உலகிலுள்ள பிரதான தேசங்களின் பிரதிநிதிகளெலலாம் கர்தினல் சபையில் அங்கம் வகிக்கின்றார்கள்.

அஞ்சலா: உலகின் மிகக்கடைகெட்ட சாதியாராக ஒருகாலத்தில் மதிக்கப்பட்ட நீக்ரோவரிலும் ஒருவர் கர்தினல்மார்சபையில் இடம்பெற்றுள்ளாரே.

அம்மா: அவருடைய பெயரென்ன?

அன்ரன்: அவர்தான் கர்தினல் லூட்ரியன் றுகம்பாவா ஆண்டவர். தங்கநீக்காவைச்சேர்ந்தவர்.

கார்மெலா: கர்தினல் வலேரியன் கிறேசியஸ் ஆண்டவர் இந்தியரல்லவா?

அப்பா: ஆம். பம்பாயில் தமது தலைமைப்பீடத்தைக் கொண்டிருக்கிறார்.

பெரியண்ணா: வட அமெரிக்காவிலும் ஐந்து கர்தினல்கள் உண்டு. ஆயின் நியூயோர்க்கைச்சேர்ந்த கர்தினல் ஸ்பெல்மன் ஆண்டவருக்கு அங்கு மிகுந்த செல்வாக்குண்டு. அதுமட்டுமல்ல உலகிலேயே அதிகசெல்வம் வாய்ந்த ஒரு கத்தோலிக்க மேற்றிராசனத்தின் தலைவர் என்ற பெருமையும் இவருக்குரியது.

நிர்மலா: மற்றைய தேசங்களிலுள்ள கர்தினல்களில் பிரதானமானவர்களையும் சொல்லுங்கள்.

அகஸ்ரின்: தென்னமரிக்காவில் கொலம்பியாவைச்சேர்ந்த கர்தினல் லூயிஸ் கொன்ஸா பிறமதத்திலிருந்து கத்தோலிக்கத்துக்குத்திரும்பிய ஜப்பானிய கர்தினல் பீற்றர் டோய் ஆண்டவர் ஜப்பானில் மிகவேகமாகக் கத்தோலிக்கமதம் போதிக்கப்பட வேண்டுமென விரும்புபவர். [illegible]னல் அகாசியோ கூஸ்ஸா கீழைத்தேச சடங்கானுசார முறைகளில் பாப்பரசரின் ஆலோசகராகக் கடமையாற்றுகிறார்.

பெரியண்ணா: கர்தினல் கோஸ்ரானூனஸ் போர்த்துக்கலைச்சேர்ந்தவர். ஐரிஸ்காரரான கர்தினல் மைக்கல் பிறவுண் டோமினிக்கன் சபையின் பிரதம தலைவராவர். திருச்சபையின் மிகஇளவயதினரான கர்தினல் என்ற பெருமை ஜேர்மனியரான யூலியஸ் டொப்னெரையே சாரும்.

அப்பா: இரும்புத்திரை நாடுகளின் பின்னல் பல்வேறு இன்னல்களையும் நம்திவ்விய இரட்சகருக்காக நல்மனதுடன் அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் போலந்துதேசத்தைச்சேர்ந்த கர்தினல் விசின்ஸ்கி ஆண்டவரும் கங்கேரியைச்சேர்ந்த மின்சேந்தி ஆண்டவருமாகும். இவர்கள் சுதந்திரமாக இறைவனின் பணியை மேற்கொள்வது எக்காலத்திலோ?

அகஸ்ரின்: நீங்கள் சுதந்திரம் என்றதும் அண்மையில் பத்திரிகைகளில் படித்த சம்பவமொன்று நினைவுக்கு வருகிறது. கிழக்கு ஜெர்மானியப் பெண்ணொருத்தி தன்காதலுடன் சுதந்திரமாக வாழ்வதற்காக இரும்புத்திரையின் பின்னலிருந்து பல இடுக்கணகளைத்தாண்டி வெளியேறிய நிகழ்ச்சி அது.

அன்ரன்: இரண்டாவது உலகயுத்த முடிவில் ஜெர்மானியரை அடக்க வேண்டுமென்று ரூசியா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா என்னும் நான்கு தேசங்களும் ஜெர்மானியையும் அதன் தலைநகரான பேர்லினையும் நான்கு கூறுகள் ஆக்கிவிட்டன. இக்கூறுகள் இப்போது மேற்கு ஜெர்மனி, கிழக்கி ஜெர்மனி என்ற இரு பிரிவுகளாகி மேற்குப்பகுதி நேசநாடுகளால் சுதந்திரமளிக்கப்பட்டு அவர்கள் பாதுகாவலில் முன்னேறிவருகிறது. கிழக்கு ஜெர்மனி பொதுவுடமையால் பொதியப்பட்டுள்ளது. முன்னர் ஒரு ஜெர்மனியிலிருந்து மற்ற ஜெர்மனிக்குப்போவதும் வேலைபார்ப்பதும் கொண்டாடுவதும் இலகுவாயிருந்தது. ஆயின் சென்றவருடத்தில் கிழக்கு ஜெர்மானியர், பேர்லினில் தங்களிடமுள்ள பகுதியை அடைத்து எவருமே மற்றப்பகுதிக்குச் செல்லக்கூடாதென உத்தரவுபோட்டுவிட்டனர்.

பெரியண்ணா: இவ்விதம் உத்தரவிட்டமைக்குக்காரணம் பொதுவுடமை அரசாங்கம் ஆட்சிசெய்யும் கிழக்கு ஜெர்மானியில் வசிக்க இயலாமல் காலத்துக்குக்காலம் ஏராளமானோர் மேற்கு ஜெர்மானிக்குச் செல்வதும் அங்குள்ள அரசாங்கம் இவ்வகதிகளை ஏற்று வசதிகள்செய்து கொடுப்பதுமே யாகும்.

கார்மெலா: அத்தான் சொல்லவந்த கதையை இரண்டுபேருமாகக் குழப்பிவிட்டீர்களே.

அகஸ்ரின்: மேற்கு ஜெர்மானியைச் சேர்ந்த வாலிபனொருவன் 3 வருடங்களின்முன் கிழக்கு பேர்லினுக்கு விளையாட்டுப் போட்டியொன்றைப் பார்க்கப் போயிருந்தபோது கைதுசெய்யப்பட்டு 3 வருடக்காவல் விதிக்கப்பட்டான். சிறையிலிருக்கும்போது பேர்ண்ட் என்ற அந்த வாலிபன் மரியா என்ற அழகியின்மேல் காதல் கொண்டான். சிறைக்காலம் முடிந்ததும் இருவரும் மேற்கு பேர்லினுக்குச்சென்று வாழ்வது என முடிவுசெய்தனர். அரசாங்கம் வாலிபனைமட்டும்தான் செல்ல அனுமதிக்கும். எனவே, ஒரு பெரிய பிரயாணத் தோற்பெட்டியில் மரியா அடைக்கப்பட்டாள். காற்றுச்செல்வதற்காகச் சில துவாரங்கள் அப்பெட்டியிலிருந்தன. எல்லை தாண்டுமிடத்துக்கு வந்தபோது கடுமையான பரிசோதனை நடைபெற்றது. தனக்குப் பெட்டிகளேதும் இல்லையென்று வாலிபன் கூறிவிட்டான். பெட்டி ஆசனங்கட்குக்கீழ் ஒதுக்குப்புறமாக வைக்கப்பட்டிருந்தது. எல்லையைத் தாண்டும்போது சகபிரயாணியான ஆபிரிக்கர் ஒருவர் பெட்டியைத் தூக்கிச்சென்றார். இவ்விதம் பொதுவுடமை எல்லையைத் தாண்டியதும் தான்பட்ட கஷ்டங்களையெல்லாம் மறந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினளாம் அந்தஇளம்பெண்.

அப்பா: பாக்கியசாலி அவள். தாம் விரும்பியதைப் பேசவும், எழுதவும், படிக்கவும், வணங்கவும் உரிமையற்று பல இலட்சக்கணக்கானோர் கொடுங்கோலாட்சிகளால் அவஸ்தையுற்று வருகின்றனர். அவர்களெல்லாம் சுதந்திர சூரியனைக் காணவேண்டுமென்று மன்றாடுவோமாக.

## கொழும்பு அதிமேற்றி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வீக வலிமைஅதிகரிக்கின்றது. கிறிஸ்துவின் ஞானச்சரீரத்துடன் உள்ள ஒற்றுமையும், ஐக்கியமும் பலப்படுத்தப்படுகின்றது. கிறிஸ்துநாதரை ஒத்திருத்தல் செறிவாக்கப் படுகின்றது. இதன்பயனாய் நாம், அவரால், அவரில் "பரிசுத்தரும், மாசில்லாதவரும், அமலரும், பாவிகளினின்று பிரிக்கப்பட்டவரும், பரமண்டலங்களுக்கு மேலாக உயர்ந்தவருமாகிய" (எபி. 7:26). அவரைப்போன்றவர்களாயாகின்றோம்.

ஆகவே, பரிசுத்ததனத்தை அடையும் வழிவகைகள் திருச்சபையில் இருப்பதாலும்,

திருச்சபையின் அங்கத்தவர்கள் சாதாரண பரிசுத்ததன்த்தை மாத்திரம் அல்ல,

ஆனல், பரிசுத்ததனத்தின் கொடுமுடியாகிய வீரிய பரிசுத்ததனத்தை அநேகர் அடைந்து வருகின்றமையாலும் திருச்சபை உண்மையாகவே பரிசுத்தமாக இருக்கின்றது.

### 3. திருச்சபை பொதுவாய் இருக்கிறது

உண்மையில் அடியிடப்பட்டு, சுபாவத்துக்குமேலான தன்மையையே மூலாதாரமாய்க்கொண்டிருக்கும் திருச்சபை தன்மடியிற் சேரவரும் அங்கத்தவருக்குச் சுபாவத்திற்கு அடுத்த கட்டுப்பாடோ, எல்லையோ போடுவதில்லை. பாஷை, இனம், நிறம் தேசம் என்ற பாகுபாடும் வித்தியாசமும் திருச்சபையில் காணக்கிடையாது. முழுமனித குலத்தையும் அது தழுவி அணைக்கின்றது. ஏனெனில், கிறிஸ்துநாதர் ஒரு குறிக்கப்பட்ட இனத்தாரை அல்லது தேசத்தாரை மாத்திரம் இரட்சிக்கவரவில்லை. கிறிஸ்துவின் ஞானச்சரீரத்தில் மனிதனாய் அவதரித்த தேவகுமாரனாகிய கிறிஸ்துநாதருடன் எல்லாரும் ஒன்றித்திருக்கின்றார்கள். அவர் மூலமாய், அவர்கள் எல்லாரும் பரலோகத்தில் இருக்கும் ஒரேபிதாவின் பிள்ளைகளாய் இருக்கின்றனர். ஆகவே, அவர்கள் தமக்குள்ளே ஒருவரோடொருவர் சகோதரர்களாய் இருக்கின்றனர். யூதரென்றும் கிரேக்கரென்றும் இல்லை. அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை. எல்லாரும் யேசுக்கிறிஸ்துநாதரிடத்தில் ஒன்றாய் இருக்கின்றீர்கள் (கலாத்தியர் 3:28) இவ்வித அகிலஉலக சகோதரத்துவ அன்பில், உண்மைக் கருத்தின்படி திருச்சபையானது பொதுவாய் இருக்கின்றது.

(தொடரும்)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday April 15-1962

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org